CASH FOR GOLD
R-GOLD
Mob: 93457 93457

# THE KOVAI HERALD
தி கோவை ஹெரால்டு

RNI.Regn.No.TNBIL/2018/76255 | Postal No: CB/154/2024-26 | Kovai / Tirupur | thekovaiherald.co.in | facebook.com/Thekovaiherald

Volume 8 | Issue 43 | English & Tamil Weekly | 29.3.2026 SUNDAY | 8 Pages | Price Rs.5/-

CASH FOR GOLD
R-GOLD
Mob: 93457 93457

# CSR HOSPITAL
## சி.எஸ்.ஆர். மருத்துவமனை

272, 7th street Extension, Gandhipuram, Coimbatore - 641 012.
Ph : 8300128777

NABH ACCREDITED

# DEPARTMENT OF ENT
## காது-மூக்கு - தொண்டை சிகிச்சை பிரிவு

### Worried about any of the following problems?

- TONSILLITIS
- RECURRENT THROAT INFECTION
- NASAL BLOCK
- DEVIATED NASAL SEPTUM
- EAR PAIN
- EAR DISCHARGE
- GIDDINESS

### நீங்கள் கீழ்கண்ட தொந்தரவினால் அவதிப்படுகிறீர்களா?

- டான்சில் கட்டி
- அடிக்கடி தொண்டை வலி
- மூக்கடைப்பு
- மூக்கு தண்டுவடம் கோணல்
- காது வலி
- காதில் நீர் வடிதல்
- தலைசுற்றல்

### Procedures performed

- NASAL ENDOSCOPY
- LARYNGOSCOPY
- OTOSCOPY
- EAR WAX REMOVAL
- FOREIGN BODY REMOVAL
- EAR LOBE REPAIR
- FESS
- TONSILLECTOMY
- ADENOIDECTOMY
- SEPTOLASTY
- MASTOIDECTOMY

### மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகள்

- மூக்கு உள்நோக்கி
- குரல் வளையம் உள்நோக்கி
- காது அழுக்கு அகற்றுவது
- காது, மூக்கு, தொண்டையில் சிக்கிய பொருள் அகற்றுவது
- காது துளை சீரமைப்பு
- டான்சில் கட்டி அகற்றுதல்
- மூக்கு சதை அகற்றுதல்
- சைனஸ் சுத்தம் செய்தல்
- மாஸ்டாய்டு சைனஸ் அறுவை சிகிச்சை


**Consult our ENT Specialist**

Consulting Hours : Morning 10.00 am to 3.00 pm

பார்வை நேரம்: காலை 10.00 முதல் மதியம் 3.00 வரை

# Be The Best That You Can Be

THE KOVAI HERALD



**Question:** Namaskaram Sadhguru. The idea of competition is so ingrained in our minds in every aspect of our lives, that it creates a lot of unnecessary stress. What can be done about this?

**Sadhguru:** Competition is not necessarily a bad thing. Lack of competence is a bad thing. If you are incompetent and you are in competition, you will feel stressed. If you want to be in a competitive situation, you have to work on your competence. Right now, the problem is that you are tweaking your desire without tweaking your competence. Socially, we call this ambition or goal-orientedness. But instead of tweaking up your desire, if you tweak up your competence, wherever you go, you will do better than people expect you to.

The most fundamental thing you need to understand is that you can never be better or worse than someone. It is all in your mind. The desperation to be better than someone arises only because you did not find anything of value within yourself. Those who do not have any sense of their own competence will become competitive because their only pleasure is in being one step ahead of someone else. When you enjoy something that other people do not have, or when you enjoy other people's suffering, it is sickness, not joy. But this sickness has permeated into the world in a huge way and we think this is the only way to achieve something in our lives.

Right from an early age, even before children start school, their parents start telling them, "I am going to put you in the best school, you must be number one, you must be the best student." Everybody else must be less than you, that is the only wish! If your joy comes from other people's suffering, it will not lead to either your wellbeing or the world's wellbeing.

With this kind of sickness, even simple aspects of life like eating well and sleeping well will not happen. This is already the situation in modern societies.

Either people must pop a pill or have a drink, otherwise most of them cannot sleep.

Competition is okay in the short-term. It is okay if you want to run a race, but life is not a race. If life becomes a race, and if you want to win, you must hit the finish line first, isn't it? In a race like that, if you win, you are gone! There is no need to make life into a race. Here and there, we will race with each other for sport, and we will race like our life depends on it! But there is no need to make your entire life into a race. You do not have to be the best nor do you have to be better than someone else.

You just have to be the best that you can be. Everything that you can be must happen because every one of you is a unique being.

The important thing is, will you unfold all the possibilities that you hold within yourself? This is all your concern should be. If you focus enough on enhancing your competence, you will see that there is so much joy in breaking your limitations every day and becoming something better. You will no longer care a damn how someone else is doing.

Excellence is not about being better than someone else. Excellence means to function with utmost ease and at your best. Unfortunately, in the name of competition, most human beings are not exploring the depth and dimension of their own intrinsic competence. Maybe you could fly, but instead you are choosing to be one step ahead of someone else. This is not the way to approach life. True excellence is about the full blossoming of an individual human being.

# KMCH Hosts Pre-Conference Workshop on Digital Healthcare Ahead of CAHOCON 2026

THE KOVAI HERALD



Dr. Arun Palaniswami, Executive Director of KMCH, inaugurated the special workshop on Digital Healthcare in the presence of Dr. Sivakumaran, Chief Operating Officer of KMCH.

As the healthcare sector rapidly moves toward digital transformation, Kovai Medical Center and Hospital (KMCH) organized a high-level pre-conference workshop titled "The New Digital Healthcare: AI, Cyber Security and DPDP" in Coimbatore.

The workshop served as a curtain-raiser for the 10th edition of CAHOCON 2026 and the First ISQua Regional Conference for South Asia, which will be held from April 10 to 12, 2026, at the Chennai Trade Centre under the theme "Tech, Touch and Trust The New Healthcare Code." The conference is to be led by Dr. Nalla G. Palaniswami, as Organizing Chairperson.

Explaining the objective of the workshop, Dr. Arun Palaniswami, Executive Director of KMCH, said it focused on three major challenges currently faced by healthcare organizations: the practical implementation of Artificial Intelligence (AI) in hospitals, the growing cybersecurity threats in healthcare systems, and the implications of the Digital Personal Data Protection (DPDP) Act, which could impose heavy penalties on organizations that fail to safeguard patient data.

The workshop featured expert sessions highlighting the transformative role of technology in healthcare. Dr. Mathew Cherian, Chief of Radiology at KMCH, Dr. R. Subramaniam, Senior Consultant in Radiation Oncology, Karthi Purushothaman, CEO of 1Hat Solutions, Biju Velayudhan, Chief Information Officer of GKNM Hospitals, Arunachalam, Director of Ninth Dimension, Ravi Shankar S, Director of Aiosta India, gave sessions at Speaking at the event, Dr. Nalla G. Palaniswami, Chairman and Managing Director of KMCH, stressed that integrating AI into healthcare is no longer optional but essential for achieving clinical excellence. He also noted that hosting such a workshop in Coimbatore reflects the city's emergence as a significant hub for healthcare innovation.

Earlier, Dr. Sivakumaran, Chief Operating Officer of KMCH, delivered the welcome address, and Rabeena, Programme Executive of CAHOCON, proposed the vote of thanks.

# Ananya's Nana Nani Hands Over Phase 7 Homes in Coimbatore

THE KOVAI HERALD



Ananya's Nana Nani, a senior living community in Coimbatore, marked another milestone in its journey by officially handing over Phase 7 homes. The organizers also announced that Phases 8, 9, and 10 are currently under development.

A significant spiritual highlight of the celebration was the Mahakumbabishegam of the Sri Kalyana Subramaniya Swamy Temple within the community premises. Devotees also had the opportunity to witness the 20-foot blessed Murugan statue, creating a serene and spiritual atmosphere. As part of the celebrations, a special spiritual discourse by Desa Mangaiyarkarasi and a live Carnatic music concert by Sandeep Narayan and his team were held. In addition, Ananya's Nana Nani introduced a one-day tour experience, allowing interested individuals to pre-book and spend a day exploring the community and its facilities to understand the senior living lifestyle offered at the campus.

# Kumaraguru Institutions Honours 1,675 Students with Mahatma Gandhi Merit Scholarship Worth Rs.1.6 Crore

Kumaraguru Institutions awarded a total of ₹1.6 Crore in scholarships to 1,675 meritorious students during the annual Mahatma Gandhi Merit Scholarship (MGS) ceremony.

Each scholar received Rs.10,000 as a reward for their outstanding performance in academics, sports, and NCC, reinforcing the institution's belief that dedicated effort is the true foundation of national progress. The event featured Dr. K.P. Ramasamy, Chairman of KPR Group, as the Chief Guest. Dr. M. Ezhilarasi, Principal of Kumaraguru College of Technology (KCT), welcomed the gathering. Dr. B. K. Krishnaraj Vanavarayar, Chairman of Kumaraguru Institutions presided over the event. The event also had the presence of Shankar Vanavara yar, President Kumaraguru Institutions, M Balasubramaniam, Corres pondent, Kumaraguru Institutions besides students and staff from the Kumaraguru family.



Dr. K.P.Ramasamy, Chairman KPR Group being felicitated by Dr BK Krishnaraj Vanavarayar, Chairman, Kumaraguru Institutions in the presence of Shankar Vanavarayar, President Kumaraguru Institutions, M Balasubramaniam, Correspondent, Kumaraguru Institutions.

# SNR Sons Charitable Trust CEO C.V.Ramkumar Conferred 'Humanitarian Icon' Award

THE KOVAI HERALD



C.V. Ramkumar, Chief Executive Officer of SNR Sons Charitable Trust, has been honoured with the 'Humanitarian Icon' Award by the Rotary Club of Saicity and Rotary District 3206 for his contributions to humanitarian healthcare initiatives.

The award was presented by District Governor Rtn. Chella K. Raghavendar at a ceremony attended by Joint Managing Trustee Narendran, Medical Director Dr. S. Rajagopal, Medical Superintendent Dr. S. Alagappan, and doctors of Sri Ramakrishna Hospital.

Ramkumar received the honour for his role in the Gift of Life Project, a joint initiative of Sri Ramakrishna Hospital and the Rotary Club of Saicity that provides free heart surgeries for children with congenital heart defects from underprivileged families. Accepting the award, Ramkumar dedicated the recognition to Managing Trustee Dr. Sundar Ramakrishnan and the Board of Trustees of SNR Sons Charitable Trust, and thanked the Rotary Club for its continued partnership in serving the community.

Sri Ramakrishna Hospital reiterated its commitment to providing compassionate and accessible healthcare and continuing community initiatives such as the Gift of Life Project.

# Property Prices Soar in Coimbatore Owning a House Becoming Difficult for Middle Class

Once considered an affordable alternative to Chennai, Coimbatore's real estate market has witnessed a sharp surge in land prices and construction costs over the past four years, making it increasingly difficult for middle and lower-middle-class families to buy homes within the city.

According to market observations shared by a social media user, land prices in several parts of Coimbatore have nearly doubled between 2022 and 2026. Areas such as Saravanampatti, known as the city's IT corridor, have seen land prices rise from around Rs.3,500Rs.4,500 per sq. ft. to Rs.6,000Rs.8,000. In Kalapatti, near the airport and industrial zones, prices have increased from Rs.2,500 Rs.3,500 to Rs.5,000Rs.6,500 per sq. ft.

Similarly, Vilankurichi, close to IT parks, has witnessed prices rise from Rs.2,800 Rs.3,800 to Rs.5,500Rs.7,000 per sq. ft.. In Kovaipudur, land prices have increased from Rs.2,000Rs.3,000 to Rs.4,000Rs.5,500, while Perur and Sundakkamuthur have seen rates climb from Rs.1,800Rs.2,500 to Rs.3,500 Rs.5,000 per sq. ft.

Apartment prices have also surged across the city. A standard two-bedroom apartment (2BHK) in many areas now costs between Rs.70 lakh and Rs.95 lakh, while prices in prime locations such as Avinashi Road and central Coimbatore range from Rs.8,000 to Rs.12,000 per sq. ft. At the same time, apartment sizes have reduced to around 600800 sq. ft. Experts note that building an independent house has also become significantly expensive. Purchasing 1,200 sq. ft. of land in the city's outskirts now costs around Rs.50 lakh to Rs.80 lakh, while construction expenses have increased to Rs.2,200 Rs.3,000 per sq. ft. As a result, constructing a modest independent house could cost between Rs.1 crore and Rs.1.4 crore.

Analysts attribute the situation to a widening gap between income growth and property prices. While salaries typically increase by 58% annually, property values in the city have risen by 1220%, pushing home ownership beyond the reach of many middle-class families.

Urban planners and experts suggest that the city's growth must be supported by planned expansion in western and southern regions, improved infrastructure, stricter control over speculative land trading, and government incentives for affordable housing. They also emphasize the need to strengthen public transportation to reduce pressure on the city centre.

While Coimbatore's rapid growth is widely welcomed, experts say ensuring that the middle class is not left behind in the city's development remains a key challenge.

# International Mathematics Conference Held at Kongunadu Arts and Science College

THE KOVAI HERALD




The Department of Mathematics of Kongunadu Arts and Science College organized the 9th International Conference on Current Scenario in Pure and Applied Mathematics (ICCSPAM 2026).

The inaugural session was presided over by Dr. V. Sangeetha, Principal of the college, while Dr. V. Kokilavani, Associate Professor and Head of the Department of Mathematics and Convener of the conference, delivered the welcome address. Dr. S. Paulsamy, Director of Prof. M. Aruchami Research Foundation, delivered the felicitation. Dr. V. Lokesha from Vijayanagara Sri Krishnadevaraya University, Ballari, released the abstract book and delivered the special address. The vote of thanks was proposed by Dr. M. Venkatachalam, Assistant Professor and Organizing Secretary.

Technical sessions featured lectures by experts including Dr. Suresh Rasappan, Dr. R. Parvathi, Dr. V. Lokesha, and Dr. H.S. Boregowda, who spoke on topics related to quantum computing, fuzzy sets, topology, and graph theory. More than 80 scholars presented research papers during the conference. The sessions were chaired by Dr. P.S. Ranjini, Dr. S. Lakshmanan, Dr. A. Saraswathi, Dr. Sandeep Kumar, Dr. J. Veninstine Vivik, Dr. M.S. Ranganath, and Dr. S. Padmanabhan. On the second day, lectures were delivered by Dr. Dafik, Dr. Ismail Naci Cangul, Dr. Ayman Badawi, Dr. Ral M. Falcn, and Dr. A.R. Bindusree on topics including blockchain, combinatorial graph theory, cryptography, and research methods in mathematics.

During the valedictory session, Dr. L. Vidyarani welcomed the gathering, Dr. N. Mohanapriya presented the conference report, and Dr. S.K. Narasimhamurthy delivered the valedictory address. The vote of thanks was proposed by Dr. S.P.R. Priyalatha. Nearly 100 participants attended the two-day conference.

# Coimbatore Rao Hospital Bags Two Prestigious Awards at Annual IAGE Conference 2026

Rao Hospital, leading women and children's hospital has secured two prestigious prizes at the Annual Conference of the Indian Association of Gynaecological Endoscopists (IAGE), held in Kolkata.

In the Under-45 category, among 43 participants, Dr. Harshini Thirumaran was awarded the Second Prize for her video presentation titled "The Precision Duo for Isthmocele Repair.", while Dr. Kiruthika T secured the Third Prize for her presentation on "OHVIRA Syndrome: A Rare Adult Clinical Surprise." Both presentations showcased complex and rare surgical cases performed at Rao Hospital. These advanced procedures were led by Dr. Damodar Rao, Lead Surgeon Gynaec Endoscopy & Endometriosis Excision Specialist, with the support of his team. The Tamil Nadu Chapter of IAGE was conferred the Best Chapter Award at the conference.







'ரத்தம் கொடுங்கள்; பலருக்கு மறுவாழ்வு கிடைக்கும்'

# 'செந்தில்பாலாஜியே போட்டியிட்டாலும் எங்களை அசைக்க முடியாது'-எஸ்.பி.வேலுமணி

தி கோவை ஹெரால்டு

அதிமுகவேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், நேற்று சென்னையில் இருந்து எஸ்.பி.வேலுமணிகோவை வந்தார். கோவை விமான நிலையத்தில் முன்னாள் அமைச்சர்எஸ்பிவேலுமணி செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது,

எடப்பாடியார் அதிமுக தலைமையில் வெற்றிகரமாக கூட்டணி அமைத்துவேட்பாளர்களை அறிவித்துள்ளார். கோவை மாவட்டத்தில்போட்டியிடும் அதிமுக வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர். நீலகிரி, திருப்பூர் மாவட்டத்திலும் சென்னையில் சில வேட்பாளர்களை தவிர அனைத்து வேட்பாளர்களையும் எடப்பாடியார் அறிவித்து விட்டார் .

கூட்டணிகட்சிகளுக்கும் தொகுதிகள் ஒதுக்கீடு செய்து, அந்த தொகுதிகளுக்கும் வெற்றி வேட்பாளர்களை அறிவித்துள்ளார்

கோவைமாவட்டத்திற்கு நாங்கள் எல்லாம் மீண்டும் வேட்பாளர்களாக களம் இறங்க எடப்பாடியார் வாய்ப்பு கொடுத்துள்ளார். கோவை மாவட்டம் என்றைக்குமே அதிமுக கோட்டை. கடந்த 50 ஆண்டுகள் இல்லாத வளர்ச்சியை5ஆண்டுகளில் செய்துள்ளோம். புரட்சித்தலைவி அம்மா இருக்கும் போதும் சரி.. எடப்பாடியார் முதலமைச்சராக இருந்த போதும் சரி...

செய்ய முடியாத திட்டங்களை செய்துள்ளோம். திமுக ஆட்சியில் கடந்த ஐந்தாண்டுகளாக எந்த திட்டமும் வரவில்லை. அவிநாசி உள்ளிட்ட 11 தொகுதிகளிலும் அதிமுக கூட்டணி கட்சி வேட்பாளர்கள் வெற்றி பெறுவோம்.

திருப்பூர், நீலகிரி மாவட்டத்திலும் நான் பொறுப்பாகவுள்ள அனைத்துதொகுதிகளிலும் வெற்றி பெறுவோம். தமிழகம் முழுவதும் 210 தொகுதிகளை வென்று எடப்பாடியார் மீண்டும் முதலமைச்சராக அமருவார். அதிமுக ஆட்சி வந்ததும், கோவை மாவட்டத்தில் விடுபட்ட திட்டங்களை,செயல்படுத்தி மக்கள் எதிர்பார்த்த திட்டங்களை எல்லாம் கண்டிப்பாக கொண்டு வருவோம்.திமுகஆட்சியில் நடக்கும் அக்கிரமத்தைக் கண்டுதான் கோவையைச் சேர்ந்த திமுககவுன்சிலரே நம் பக்கம் வந்து விட்டார். இங்கேசெந்தில்பாலாஜியே போட்டியிட்டாலும், மீண்டும்கோவைமாவட்டம் வளர்ச்சி பெற அதிமுக கூட்டணிக்குதான் மக்கள் வாக்களிப்பார்கள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## மேட்டுப்பாளையம் திருநெல்வேலி வாராந்திர சிறப்பு ரயில் சேவை ஜூன் 29 வரை நீட்டிப்பு

மேட்டுப்பாளையம் திருநெல்வேலி இடையே இயக்கப்பட்டு வரும் வாராந்திர சிறப்பு ரயில் சேவை ஜூன் 29-ஆம் தேதி வரை நீட்டிக்கப் பட்டுள்ளதாக சேலம் ரயில்வேகோட்டநிர்வாகம் தெரிவித்துள்ளது.



மேட்டுப்பாளையம் மற்றும் திருநெல்வேலி இடையே கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும்மேலாக வாராந்திர சிறப்பு ரயில் இயக்கப்பட்டு வருகிறது.

இந்த ரயில் சேவைக்கு பயணிகள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்ததுடன், ரயில்வே நிர்வாகத்திற்கும் கணிசமானவருவாய்ஈட்டித் தருவதாக கூறப்படுகிறது.

இதனை நிரந்தர ரயிலாக மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையை பயணிகள் தொடர்ந்து முன்வைத்துவருகின்றனர். இருப்பினும், தற்போது வரை இந்த சேவை சிறப்பு ரயிலாகவே இயக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், மார்ச் மாதத்துடன் நிறைவடைய இருந்த இந்த ரயில் சேவை தற்போது ஜூன் 29-ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து சேலம் ரயில்வே கோட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், திருநெல்வேலியில் இருந்து ஏப்ரல் 5-ஆம் தேதி முதல் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் இரவு 7 மணிக்கு புறப்படும் திருநெல்வேலி மேட்டுப்பாளையம் சிறப்பு ரயில்(எண்:06030),மறுநாள் காலை 7.30 மணிக்கு மேட்டுப்பாளையம் ரயில் நிலையத்தை சென்றடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், மறுமார்க்கமாக மேட்டுப் பாளையத்தில் இருந்து ஏப்ரல் 6-ஆம் தேதி முதல் ஒவ்வொரு திங்கள் கிழமையும் இரவு 7.45 மணிக்கு புறப்படும் மேட்டுப்பாளையம் திருநெல்வேலி சிறப்பு ரயில் (எண்: 06029), மறுநாள் காலை 7.45 மணிக்கு திருநெல்வேலி நிலையத்தை சென்றடையும்.

இந்த ரயில் சேவை கோவை, போத்தனூர், கிணத்துக்கடவு, பொள்ளாச்சி, உடுமலை, பழனி, ஒட்டன்சத்திரம், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், சிவகாசி, ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம், சங்கரன் கோவில், சேரன்மகாதேவி உள்ளிட்ட முக்கிய நிலையங்களில் நின்று செல்லும்என்றும்ரயில்வே நிர்வாகம்தெரிவித்துள்ளது.

## கோவை தெற்கு தொகுதியில் அம்மன் கே. அர்ச்சுனனை எதிர்த்து செந்தில்பாலாஜி

முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜிகோவைதெற்குதொகுதியில் போட்டியிடுவதால் மீண்டும் ஸ்டார் தொகுதியாக மாறியுள்ளது.

முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி, கோவை தெற்கு தொகுதி திமுக நிர்வாகிகளுக்கு மட்டும் தனது மொபைல் எண்ணை பதிவு செய்து வைக்க கூறி, வாட்சப் மெசேஜ் அனுப்பினார். இதைப் பார்த்த கட்சியினர், அவர் கோவையில் போட்டியிடப் போவதாக பரவலாக பேச ஆரம்பித்தனர்.

கோவை தெற்கு தொகுதி கடந்த 3 தேர்தல்களில் திமுக வெல்லாத தொகுதி ஆகும். அதனால், இந்த முறை திமுக நேரடியாக போட்டியிட வேண்டும். அதோடு, முக்கிய



தலைவர் ஒருவர் போட்டியிட வேண்டும் என்று திமுக கட்சியினர் விருப்பம் தெரிவித்துள்ளனர். திமுக தலைமை “கோவையில் நீங்கள் போட்டியிடலாமே ” என்று செந்தில் பாலாஜியிடம் ஆலோசனை செய்தது.

செந்தில் பாலாஜி ஓகே சொன்னதும் அவரை கோவைதெற்கு தொகுதியில் வேட்பாளராக்கியது.

கோவை தெற்கு தொகுதியில் அதிமுக சார்பாக அம்மன் கே. அர்ச்சுனன் போட்டியிடுகிறார். கடந்த முறை தெற்கு சட்டமன்ற தொகுதியில் கமல்ஹாசனை வானதி சீனிவாசன் 1728 ஓட்டு வித்தியாசத்தில் தோற்கடித்தார். இதனால், தமிழகத்தில் ஸ்டார் தொகுதியாக கோவை தெற்கு பார்க்கப்பட்டது. தற்போது, இந்த தொகுதி மீண்டும் ஸ்டார் தொகுதியாகியுள்ளது.

தற்போது, கோவை வடக்கு தொகுதி எம்.எல்.ஏவாக உள்ள அம்மன் கே.அர்ச்சுனன் கடந்த 2016ம் ஆண்டு கோவைதெற்கு தொகுதியில் எம்.எல்.ஏவாக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கிளைடிங் செய்த கோவை மாவட்ட ஆட்சியர்



▶ கோவை மாவட்டத்தில் 100 சதவிகித வாக்குப்பதிவை வலியுறுத்தி செட்டிப்பாளையம் பகுதியில் மாவட்ட ஆட்சியர் பவன்குமார் கிரியப்பனவர் பாரா கிளைடிங் செய்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.



# கேபிஆர் பொறியியல் கல்லூரியில் 13வது பட்டமளிப்பு விழா




கேபிஆர் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின் 13வது பட்டமளிப்பு விழா நடைபெற்றது. இதில் 968 பேர் பட்டம் பெற்றனர்.

கேபிஆர் கல்வி நிறுவனங்களின் செயலர் காயத்ரிஆனந்தகிருஷ்ணன் தலைமையில்தொடங்கியப் பட்டமளிப்பு விழாவில் மும்பையில்உள்ளஹோமி பாபா தேசிய நிறுவகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் யு. காமாட்சி முடாளி சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். கல்லூரியின் முதல்வர் முனைவர் தேவி பிரியா ஆண்டறிக்கையை வாசித்தார்.

எட்டு துறைகளிலிருந்து 935 மாணவர்களுக்கு இளநிலை பட்டமும், நான்குதுறைகளிலிருந்து33 மாணவர்களுக்குமுதுநிலை பட்டமும் இவ்விழாவில் வழங்கப்பட்டது.

கல்லூரி அளவில் முதுநிலை துறைகளில் முதலிடம் பிடித்த கட்டமைப்புப் பொறியியல் துறையைச்சேர்ந்தமாணவி ஷானியாமற்றும்இளநிலை துறைகளில் முதலிடம் பிடித்தவேதிப் பொறியியல் துறையைச் சேர்ந்த மாணவி உமாமகேஸ்வரி ஆகியோருக்கு பதக்கம் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.விழாவில் துறைத் தலைவர்கள், பேராசரியர்கள், மாணவ மாணவிகள் மற்றும் பெற்றோர் பங்கேற்றனர்.

# ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு ஐபிஎம் நிறுவனத்தின் "இன்ஸ்டிடியூசனல் எக்ஸ்சலன்ஸ்" விருது


தி கோவை ஹெரால்டு

கோவை ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு "இன்ஸ்டி டியூசனல் எக்ஸ்சலன்ஸ்" விருது வழங்கப்பட்டது.

குஜராத் மாநிலம் சூரத்தில் உள்ள ஆரோ பல்கலைக்கழகம் சார்பில் தேசிய அளவில் நடைபெற்றஹேக்கத்தான் நிகழ்வில் இந்த விருது வழங்கப்பட்டது. கல்வி மற்றும் தொழில்நுட்ப துறைகளில் சிறப்பாக செயல்பட்டு வரும் கல்வி நிறுவனங்களைபாராட்டும் வகையில் இந்த விருது வழங்கப்பட்டது.

ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்கள் பன்னாட்டு மற்றும் தேசிய அளவில் நடைபெறும் பல்வேறு ஹேக்கத்தான் போட்டிகளில் தொடர்ந்து பங்கேற்று வெற்றி பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. சமீபத்தில் சென்னை தொழில்நுட்பக்கல்லூரியில் நடைபெற்ற "ஸ்மார்ட் இந்தியா ஹேக்கத்தான்" போட்டியில், பொறியியல் கல்லூரி அணிகளுடன் போட்டியிட்டு முதல் பரிசை வென்று சாதனை படைத்தனர். அதேபோல், இஸ்ரேல் நாட்டின் ஏரியல் பல்கலைக்கழகம் நடத்திய பன்னாட்டு ஹேக்கத்தான் போட்டியிலும் இந்தியாவை பிரதிநிதித்துவப்படுத்தி ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்கள் பங்கேற்று வெற்றி பெற்று சாதனைபடைத்துள்ளனர். மாணவர்களின் புதுமைத் திறன், தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் நடைமுறை பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் திறனை பாராட்டும் வகையில் இந்த விருது வழங்கப்பட்டது.

ஐபிஎம் நிறுவன தொழில்நுட்ப நிபுணர் ஆய்வகத்தின் நாட்டின் மேலாளர் ஜெகதிஷா பட் "இன்ஸ்டிடியூசனல் எக்ஸ்சலன்ஸ்" விருதை வழங்கினார். கல்லூரி சார்பில் முதல்வரும் செயலருமான முனைவர் பி.எல். சிவக்குமார் விருதைப் பெற்றுக் கொண்டார்.இந்தவிருதைப் பெற்றுத்தந்த கல்லூரி மாணவர்களையும், அவர்களுக்கு வழிகாட்டியாக இருந்த முதல்வர் மற்றும் பேராசிரியர்களையும் எஸ்.என்.ஆர்.சன்ஸ் அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் டாக்டர் சுந்தர் ராமகிருஷ்ணன் பாராட்டினார்.




▸ ஐபிஎம் நிறுவன தொழில்நுட்ப நிபுணர் ஆய்வகம், நாட்டின் மேலாளர் ஜெகதிஷா பட்டிடம் இருந்து "இன்ஸ்டிடியூசனல் எக்ஸ்சலன்ஸ்" விருதினை ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வர் மற்றும் செயலர் முனைவர் பி.எல். சிவக்குமார் பெற்றுக் கொண்டார்.

# ஏப்ரல் 1 முதல் அத்தியாவசிய மருந்துகளின் விலை உயர்வு: மக்களுக்கு கூடுதல் சுமை



ஈரான் போரின் தாக்கம் உலகளவில் பல்வேறு பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்தி வரும் நிலையில்,இந்தியமக்களும் அதன் தாக்கத்தை உணரத் தொடங்கியுள்ளனர்.

சிலிண்டர் தட்டுப்பாடு, பெட்ரோல் மற்றும் டீசல் பற்றாக்குறை ஏற்படும் என்ற அச்சம் போன்ற பிரச்சனைகளுக்கு மத்தியில், தற்போது அத்தியாவசிய மருந்துகளின் விலை உயர்வும் மக்களுக்கு கூடுதல்சுமையாக மாறியுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் மொத்த விற்பனை விலை குறியீட்டை அடிப்படையாக கொண்டு இந்தியாவில் மருந்துகளின் விலை மாற்றம் செய்யப்படுகிறது. அதன்படி, வரும் ஏப்ரல் 1 முதல் பல்வேறு அத்தியாவசிய மருந்துகளின் விலை உயர வாய்ப்பு இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மத்திய அரசு அத்தியாவசிய மருந்துகளின் பட்டியலில் உள்ள சுமார் 1000 மருந்துகளின் விலையை உயர்த்திக்கொள்ள மருந்து நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது. இதன் காரணமாக வலி நிவாரணிகள், ஆன்டி பயாட்டிக் மருந்துகள், நோய்தொற்றை எதிர்க்கும் மாத்திரைகள் உள்ளிட்ட பல மருந்துகளின் விலை உயர உள்ளது.

பொதுமக்கள்அதிகமாக பயன்படுத்தும் பாராசிடமால், அசித்ரோமைசின், வைட்டமின் மற்றும் மினரல் மாத்திரைகளின் விலையும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. இதனால் மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும் என்றும், குறிப்பாக வைட்டமின் மாத்திரைகளை தொடர்ந்து பயன்படுத்துபவர்களுக்கு மாதாந்திர செலவு உயரக் கூடும் என்றும் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

மருந்து உற்பத்தி நிறுவனங்கள் கூறுவதாவது, ஈரான் போரின் காரணமாக மருந்து தயாரிப்பில் பயன்படுத்தப்படும் முக்கிய மூலப்பொருட்கள் மற்றும் கரைப்பான்கள் கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும், அவற்றின் விலையும் அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளன.

முக்கியமாக மருந்து தயாரிப்புக்கு அவசியமான செயல்பாட்டு மருந்து மூலப்பொருட்களின் விலை சராசரியாக 35 சதவீதம் வரை உயர்ந்துள்ளது. கிளிசரின் விலை 64 சதவீதம், பாராசிடமால் 25 சதவீதம், சிப்ரோஃப்ளோக்சசின் 30 சதவீதம் வரை அதிகரித்துள்ளதாக கூறப்படுகிறது. மேலும் மருந்து பேக்கேஜிங் செய்ய பயன்படும் அலுமினியம் தாள் மற்றும் பாலிவினில் குளோரைடு போன்ற பொருட்களின் விலையும் சுமார் 40 சதவீதம் உயர்ந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த செலவு அதிகரிப்பை கருத்தில் கொண்டு மருந்துகளின் விலையை உயர்த்த அனுமதி வழங்க வேண்டும் என்று மருந்து நிறுவனங்கள் மத்திய அரசிடம் கோரிக்கை வைத்துள்ளன. அரசு இதற்கு ஒப்புதல் அளித்தால் அத்தியாவசிய மருந்துகளின் விலை மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது.

FOR NEWS Publication
9244317182
04223147962

# ஐபிஎல் 2026 தொடக்க விழா ரத்து பிசிசிஐ அறிவிப்பு

ஐபிஎல் 2026 தொடரின் பிரம்மாண்ட தொடக்க விழாவை ரத்து செய்ய இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் (பிசிசிஐ) முடிவு செய்துள்ளது. கடந்த ஆண்டு பெங்களூருவில் ஏற்பட்ட கூட்ட நெரிசல் சோக சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு மரியாதை செலுத்தும் விதமாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் ஐபிஎல் தொடரின் தொடக்கத்தில் பாலிவுட் பிரபலங்களின் கலை நிகழ்ச்சிகள் மற்றும் வானவேடிக்கைகளுடன் கண்கவர் தொடக்க விழா நடத்தப்படும். ஆனால் இந்த ஆண்டு அந்த நிகழ்ச்சிகள் நடைபெறாது என பிசிசிஐ அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

கடந்த ஆண்டு பெங்களூரு சின்னசாமி மைதானத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 11 பேர் உயிரிழந்தனர். அந்த துயரச் சம்பவத்தை நினைவுகூரும் வகையில் இந்த ஆண்டுக்கான தொடக்க விழாவை ரத்து செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மார்ச் 28 அன்று நடைபெறவுள்ள முதல் ஆட்டத்தில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு மற்றும் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிகள் மோதுகின்றன. இந்த போட்டி எந்த தொடக்க நிகழ்ச்சிகளும் இல்லாமல் நேரடியாக தொடங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், வரும் மே 31, 2026 அன்று நடைபெறவுள்ள ஐபிஎல் இறுதிப் போட்டியின் போது ரசிகர்களை உற்சாகப்படுத்தும் வகையில் பிரம்மாண்டமான நிறைவு விழாவை நடத்த பிசிசிஐ திட்டமிட்டுள்ளது. இந்த மனிதாபிமான முடிவுக்கு கிரிக்கெட் ரசிகர்கள் மற்றும் சமூக ஆர்வலர்களிடையே வரவேற்பு கிடைத்துள்ளது.

# பத்திர எழுத்தர் பயிற்சி: பங்கேற்றவர்களுக்கு லயன் செந்தில் சான்றிதழ் வழங்கினார்




தி கோவை ஹெரால்டு

பத்திர எழுத்தர் தொழில் முனைவோருக்கான நான்கு நாள் உண்டு உறைவிட பயிற்சி வகுப்பு கோவை எட்டிமடையில் உள்ள வெங்கடேஸ்வரா கல்வி நிறுவனத்தில் நடைபெற்றது.

ப்ராப்தம் அகாடமி இயக்குனர் ரவீந்திரன், உங்கள் எதிர்காலம் அறக்கட்டளையின் பொறுப்பாளர் கோகுல் நரேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் என் நிலம் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனரும் அகில இந்திய ரியல் எஸ்டேட் கூட்டமைப்பின் தேசிய செயல் செயலாளர் லயன் செந்தில்குமார் மற்றும் நிலம் உங்கள் எதிர்காலம் நூல் ஆசிரியர் சா.மு. பரஞ்சோதி பாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டு சான்றிதழ்களை வழக்கறிஞர்கள் மற்றும் பத்திர எழுத்தர்கள் உள்ளிட்ட தொழில் முனைவோர்களுக்கு வழங்கினார்கள்.

உடன்பயிற்சியாளர்கள் சரவணன் மாரியப்பன், மோகன்,சபரி,அருள்ஜோதி சதீஷ்குமார் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

# தமிழகத்தில் மீண்டும் கலைஞர் தொலைக்காட்சி திட்டம்!

கடந்த 2006-ம் ஆண்டு தமிழ்நாட்டில் திமுக ஆட்சி ஏற்பட்டது. அப்போது, முதல்வர் கருணாநிதியின் தேர்தல் அறிக்கையில், மக்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சி வழங்கப்படும் என்று அறிவித்திருந்தார்.

இந்த சமயத்தில் தமிழகத்தில் 72 லட்சத்துக்கும் மேற்பட்ட குடும்பத்தினருக்கு கலைஞர் வண்ணத் தொலைக்காட்சி வழங்கப்பட்டது. தற்போது, அதே போலவே, அடுத்து திமுக ஆட்சி அமைந்தால் மக்களுக்கு எல்.இ.டி டி.வி வழங்க திட்டமிட்டுள்ளதாக தெரிகிறது.

ஒவ்வொரு தேர்தலிலும் தி.மு.கவுக்கு அதன் தேர்தல் அறிக்கை பெரும் பலமாக அமையும். அதனாலே தி.மு.க-வின் தேர்தல் கதாநாயகனே தேர்தல் அறிக்கைதான் என கருணாநிதி குறிப்பிடுவார். அந்த வகையில், இந்த முறையும் தி.மு.க வின் தேர்தல் அறிக்கையே பேசுபொருளாக இருக்கும் என்கிற பேச்சு எழுந்துள்ளது. கனிமொழி தலைமையிலான தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழு கடந்த ஒரு மாதமாக தீவிரமாக தேர்தல் அறிக்கையை தயாரித்து வருகிறது. 2006-ம் ஆண்டு தி.மு.க ஆட்சிக்கு வர தேர்தல் அறிக்கையே முக்கிய காரணம். அதே போல் இந்த முறையும் கவர்ச்சிகரமான அறிவிப்புகள் இடம்பெற உள்ளது. குறிப்பாக எல்.இ.டி-டி.வியை இலவசமாக அறிவிக்கும் திட்டம் இப்போது உள்ளது. அதிமுக அறிவித்துள்ள இலவச ஃப்ரிட்ஜ் திட்டத்துக்கு பதிலடி கொடுக்கும் வகையில், எல்.இ.டி டி.வி. வழங்கும் திட்டம் அமையும் என்றும் கூறுகிறார்கள்.

இலவச முழு உடல் பரிசோதனை திட்டம், இளைஞர்களுக்கென பிரதேயக அறிவிப்புகளும் இந்த தேர்தல் அறிக்கையில் இடம்பெற உள்ளது. தேர்தல் அறிக்கை வெளியிட்டபிறகே,முதல்வர் பிரசாரத்திற்கு கிளம்ப உள்ளார். தேர்தல் அறிக்கையே பிரசாரத்தில் மையப்பொருளாக இருக்க வேண்டும் என்கிற முடிவில் முதல்வர் இருக்கிறார் என்று திமுகவினர் கூறுகின்றனர்.

# வேலை ராஜினாமா செய்தால் 2 நாட்களில் சம்பளச் செட்டில்மெண்ட்

## புதிய தொழிலாளர் சட்டம் அமல்




இந்தியாவில் தனியார் நிறுவனங்களில் வேலை செய்பவர்கள் வேலைவிட்டுச் செல்லும் போது சம்பளபாக்கி மற்றும் பிற நிதி தொடர்பான தொகைகளை பெற பல வாரங்கள் அல்லது மாதங்கள் காத்திருக்க வேண்டிய நிலை நீண்ட காலமாக இருந்து வந்தது. ஆனால் இந்த பிரச்சனைக்கு தீர்வாக புதிய தொழிலாளர் சட்டம் அமலுக்கு வர உள்ளது.

மத்திய அரசு அறிவித்துள்ள புதிய தொழிலாளர் சட்டங்களின் படி, வரும் ஏப்ரல் 1 முதல் ஒரு ஊழியர் வேலைவிட்டுச் சென்றால் அல்லது பணிநீக்கம் செய்யப்பட்டால், அவருக்கான இறுதி மற்றும் முழுமையான நிதி செட்டில்மெண்ட் இரண்டு அலுவல் நாட்களுக்குள் முடிக்கப்பட வேண்டும் என விதிமுறை கொண்டு வரப்பட்டுள்ளது.

அதாவது, ஊழியர் வேலை செய்த கடைசி அலுவல் நாளிலிருந்து இரண்டு வேலை நாட்களுக்குள் அவருக்கு வழங்கப்பட வேண்டிய சம்பள பாக்கி, அலவன்ஸ், போனஸ் உள்ளிட்ட அனைத்து நிதி தொடர்பான தொகைகளும் வழங்கப்பட வேண்டும்.

இதற்கு முன்பு, ஒரு ஊழியர் ராஜினாமா செய்தாலும் அல்லது திடீரென பணிநீக்கம் செய்யப்பட்டாலும், அந்த செட்டில்மெண்ட் எத்தனை நாட்களில் முடிக்க வேண்டும் என்ற தெளிவான காலக்கெடு இல்லை. இதனால் பல ஊழியர்கள் தங்களுக்கான பணத்தை பெற நீண்ட காலம் காத்திருக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது.

புதிய சட்டத்தின் மூலம், இனி ஊழியர்கள் சம்பள பாக்கி கிடைக்குமா என கவலைப்பட வேண்டிய அவசியம் இருக்காது. இரண்டு வேலை நாட்களுக்குள் அனைத்து நிலுவை தொகைகளும் வழங்கப்பட வேண்டும் என்பதால், இது ஊழியர்களுக்கு சாதகமான மாற்றமாக பார்க்கப்படுகிறது.

இதே நேரத்தில், நிறுவனங்களுக்கு மிகக் குறுகிய காலத்தில் நிதி செட்டில்மெண்ட் செய்ய வேண்டியதால் இது சவாலாக இருக்கலாம் என்றாலும், அரசின் விதிமுறைகளுக்கு ஏற்ப செயல்பட வேண்டியது அவசியம் என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் புதிய தொழிலாளர் சட்டங்களின் கீழ், ஏப்ரல் மாதம் முதல் சம்பள கட்டமைப்புகளிலும் சில மாற்றங்கள் அமலுக்கு வர உள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

# நடு ரோட்டில் குட்டிக்கு பால் ஊட்டிய தாய்மான்... மக்கள் காட்டிய பொறுமை



தி கோவை ஹெரால்டு

சென்னை ஐ.ஐ.டியிலுள்ள சாலை ஒன்றில் மான் ஒன்று தனது குட்டிக்கு பாலுட்டிக் கொண்டிருந்த நிலையில், மக்கள் யாரும் அதற்கு தொந்தரவு செய்யாத காட்சி இணையத்தில் பரவி வருகிறது.

சென்னை ஐஐடி வளாகத்தில் ஏராளமான மான்கள் வசித்து வருகின்றன. இந்த நிலையில், அங்கு வசிக்கும் மான் ஒன்று சாலையின் நடுவில் நின்று தனது குட்டிக்கு பாலுட்டிக் கொண்டிருந்தது. இதை பார்ர்த்த வாகன ஓட்டிகள், அப்படியே தங்கள் வாகனத்தை சாலையில் நிறுத்தினர். நடந்து சென்றவர்களும் மானுக்கு பக்கத்தில் செல்லவில்லை. எந்த விதத்திலும், அந்த மானுக்கு மக்கள் இடையூரு செய்யவில்லை. குட்டி முழுவதுமாக பால் குடித்து முடித்த பின்னரே, மக்கள் மீண்டும் தங்கள் பயணத்தைத் தொடர்ந்தனர்.

இந்த காட்சியை வைபவ் குஜார் என்பவர் வீடியோவாக எடுத்து,' இதுதான் ஐஐடி மெட்ராசிஸ் ஸ்பிரிட் 'என்கிற தலைப்பில் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பகிர்ந்திருந்தார். உடனடியாக, இந்த வீடியோ வைரலானது. 10 லட்சம் பேர் இந்த வீடியோவை பார்த்துள்ளனர். 'அவசரமும் வேகமும் நிறைந்த இந்த உலகில், அங்கிருந்த மக்கள் மானின் தாய்மைக்கு காட்டிய மரியாதை அலாதியனது.' என்று ஒருவர் பதிவிட்டுள்ளார். மற்றொருவர், ' நான் ஒரு வடஇந்தியர்தான். ஆனால், வட இந்தியர்களிடம் இத்தகையை குணத்தை பார்க்க முடியாது. தென்னிந்திய மக்கள் இரக்க குணம் நிறைந்தவர்கள்' என்று கமெண்டில் தெரிவித்துள்ளார்.

### கோவையில் கடை திறப்பு விழா

# 50 ஆயிரம் கேட்ட திருநங்கைகளால் கதறிய உரிமையாளர்



தென்னிந்தியாவின் மான்செஸ்டர் நகரம் என்று அழைக்கபடும் கோவை மாநகரில் தொழிலதிபர்கள், கடைக்காரர்கள் புதிய நிறுவனங்கள், கடைகளை திறந்தால், அங்கு சென்று திருநங்கைகள் பணம் வசூலிப்பது வாடிக்கையாகி வருகிறது. பணம் கொடுக்கவில்லையென்றால் சாபம் கொடுப்பதும், அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கோவை ஆர் எஸ் புரம் பகுதியில் இன்று ஷிங்க் என்கிற பெயரில் கிரிக்கெட் விளையாட்டு உபகரணங்கள் விற்பனை செய்யும் கடை திறப்பு விழா நடைபெற்றது. இதையடுத்து, அந்த கடை முன் திரண்ட திருநங்கைகள் ரிப்பன் வெட்டிய அடுத்த விநாடி அத்துமீறி கடைக்குள் நுழைந்தனர்.

பின்னர், கடையின் உரிமையாளரின் பெயரை, விசாரித்து அவரிடத்தில் சென்றனர். 'நாங்கள் 10 பேர் வந்துள்ளோம்... தலைக்கு 5 ஆயிரம் வீதம் 50,000 தர வேண்டும் . அப்படி, கொடுத்தால்தான் கடையில் பொருட்கள் நன்றாக விற்பனையாகும். இல்லையென்றால்,நாங்கள் சாபம் விட்டு விடுவோம் ' என்று மிரட்டினர்.

இதனால், அதிர்ச்சியடைந்த கடை உரிமையாளர் தன்னிடம் இருந்த 501 ரூபாயை எடுத்து, அவர்களிடம் கொடுத்துள்ளார்.

'பிறகு வாருங்கள் பணம் தருகிறேன் 'என்று கூறியுள்ளார். அதற்கு' உன்னிடத்தில் நாங்கள் பிச்சைகேட்டுவரவில்லை. இந்த 501ரூபாய் பணத்தை நீயே வைத்துக்கொள் 'என்று திருநங்கைகள் திருப்பிகொடுத்துள்ளனர். இந்தகடைதிறப்புவிழாவில் சிறப்பு விருந்தினராக கோவைமண்டலவருமான வரித்துறை அதிகாரி பிரபாகரன் கலந்து கொண்டார்.

அவரது,முன்னிலையில் திருநங்கைகள் இப்படி நடந்து கொண்டது, அனைவரையுமுகம்சுளிக்க வைத்தது. பின்னர், கடை உரிமையாளர் தலைக்கு ஆயிரம் வீதம் 10 ஆயிரம் கொடுத்து அவர்களை வெளியே அனுப்பினார்.

கோவையில் தொடர்ந்து, இது போன்று தொழிலதிபர்கள், கடைக்காரர்களை மிரட்டி திருநங்கைகள் பணம் பறிக்கும் சம்பவம் அதிகரித்து வருகிறது. கோவைகாவல்துறையினர் பணம் வசூலில் ஈடுபடும் திருநங்கைகள் மீது உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கடைக்காரர்கள் வேண்டுகோள்விடுத்துள்ளனர்.

# ராயல் கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை சார்பில் விழிப்புணர்வு வாக்கத்தான்

தி கோவை ஹெரால்டு




ராயல் கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை சார்பில் கோவை ரேஸ்கோர்சில் நடைபெற்ற விழிப்புணர்வு வாக்கத்தானை ராயல் கேர் மருத்துவமனையின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனரும், நரம்பியல் மற்றும் முதுகெலும்பு அறுவை சிகிச்சை நிபுணருமான டாக்டர் க.மாதேஸ்வரன், ஐ.எம்.ஏ. கிளையின் தலைவர் டாக்டர் பி.கோஷல் ராம் மற்றும் கௌரவச் செயலாளர் டாக்டர் டி.பரமேஸ்வரன் ஆகியோர் கொடியசைத்து துவக்கி வைத்தனர். உடன், டாக்டர்கள் எம்.என்.சிவகுமார், கே.டி.மணி செந்தில்குமார், பரந்தாமன் சேதுபதி ஆகியோர்.

உலக தலைக்காயம் மற்றும் விபத்து காயம் விழிப்புணர்வு மாதத்தை முன்னிட்டு, ராயல் கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை சார்பில் விழிப்புணர்வு நடைப் பயணம் நடைபெற்றது.

கோவைரேஸ்கோர்சில் இருந்து புறப்பட்ட இந்த நடை பயணம் டாக்டர் நஞ்சப்பா சாலையில் உள்ள ராயல் கேர் சிட்டி யூனிட் மருத்துவமனையை சென்றடைந்தது .

முன்னதாக நடைபெற்ற தலைக்காயம் மற்றும் விபத்து காயம் மேலாண்மைவிழிப்புணர்வு நடைப்பயணம் நிகழ்ச்சிக்கு ராயல்கேர் மருத்துவமனையின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனரும், நரம்பியல் மற்றும் முதுகெலும்பு அறுவை சிகிச்சை நிபுணருமான டாக்டர் க.மாதேஸ்வரன் முன்னிலை வகித்தார்.



கோவை ஐ.எம்.ஏ. கிளையின் தலைவர் டாக்டர் பி.கோஷல் ராம் மற்றும் கௌரவச் செயலாளர் டாக்டர் டி.பரமேஸ்வரன் ஆகியோர் இந்த நடை பயணத்தை தொடங்கி வைத்தனர்.

இதுகுறித்து ராயல் கேர் மருத்துவமனைதலைவரும் நிர்வாக இயக்குனருமான டாக்டர் க.மாதேஸ்வரன் கூறுகையில், அதிவேக வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு, விழிப்புணர்வின்மை, போக்குவரத்து விதிகளைப்பின்பற்றாதது, தலைக்கவசம் மற்றும் இருக்கைப் பட்டைகளை அணியாதது, அதிவேகம் மற்றும் வாகனங்களை முறையாகப்பராமரிக்காதது ஆகியவைதலையில்காயம் ஏற்படுத்தும்பல விபத்துக்களுக்குக்காரணமாகின்றன.

மேலும், பொதுமக்களிடையேவிழிப்புணர்வை அதிகரிக்க இதுபோன்ற நிகழ்ச்சிகளை நடத்துவதில் ராயல்கேர் மருத்துவமனை ஆர்வமாகஉள்ளதுஎன்றும் அவர் குறிப்பிட்டார்

இந்நிகழ்ச்சியில்டாக்டர்கள் எம்.என்.சிவகுமார், கே.டி.மணிசெந்தில்குமார், கோசல் ராமன் டாக்டர் பரந்தாமன்சேதுபதி,ராயல் கேர் மருத்துவமனையின் மார்க்கெட்டிங் பிரிவு முதன்மைபொதுமேலாளர் எம்.வெங்கடேசன் உள்பட ராயல் கேர் மருத்துவ மனையின் மருத்துவர்கள், துணை மருத்துவ மற்றும் நிர்வாகப் பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் 400 பேர் கலந்து கொண்டனர்.

# வெள்ளலூர் குப்பைக்கிடங்கு; விபரம் கேட்ட குடியரசுத் தலைவர் அலுவலகம்



கோவை வெள்ளலூர் குப்பைக்கிடங்கு தொடர்பாக சமூக செயற்பாட்டாளரும், வெள்ளலூர் பகுதியில் வசித்து வருபவருமான, கே.எஸ் மோகன் என்பவர் தென் மண்டல பசுமை தீர்ப்பாயத்தில் வழக்கு ஒன்றை தொடர்ந்துள்ளார்.

இது தொடர்பாக நீதியரசர்கள் மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியத்தை பிரதிவாதியாக இணைத்து, 6வாரங்களுக்குள் குப்பைக் கிடங்கை ஆய்வு செய்து, பிப்ரவரி 28ம் தேதி முன்பாக ஆய்வறிக்கையை தாக்கல் செய்ய உத்தரவிட்டனர்.

தொடர்ந்து, பிப்ரவரி 12,13 ஆகிய தேதிகளில் கோவை வெள்ளலூர் குப்பை கிடங்கில் ஆய்வு செய்யப்பட்டது.

குப்பைக்கிடங்கில் நடைபெற்ற ஆய்வில் பங்கு கொள்ள மோகன், சென்றார். அப்போது, அவரை உள்ளே அனுமதிக்கவில்லை. வெள்ளலூர் குப்பைக்கிடங்கால் பாதிக்கப்பட்டோரையும் கட்டாயமாக இந்த வழக்கில் சேர்த்து வெளிப்படையான மறுஆய்வு மேற்கொள்ள வேண்டும் என இந்திய குடியரசுத் தலைவருக்கு மோகன் கடிதம் எழுதியிருந்தார்.


மேலும் அவர் அந்த கடிதத்தில், இந்த ஆய்வு தொடர்பாக சேகரிக்கப்பட்ட அனைத்து தரவுகளும் பொதுமக்களுக்கு வெளிப்படையாக அறிவிக்கப்பட வேண்டும். நீதிமன்ற உத்தரவுகள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் மோகன் குறிப்பிட்டிருந்தார்.

குடியரசுத் தலைவர் மட்டுமல்லாமல் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் தலைவர், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் நீர் வழங்கல் துறை, சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் உறுப்பினர் செயலாளர், தமிழ்நாடு சுற்றுச்சூழல் துறை மற்றும் தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் தெற்கு மண்டல அமர்வுக்கும் இந்த கடிதத்தை அவர் அனுப்பியிருந்தார்.

இந்த நிலையில் குடியரசுத் தலைவரின் தனி செயலர் தமிழக அரசின் தலைமை செயலாளருக்கு கோவை வெள்ளலூர் குப்பைகிடங்கு தொடர்பாக மின்னஞ்சல் ஒன்றை அனுப்பியுள்ளார். அதில், ''குடியரசுத் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ள மனு தொடர்பாக உரிய கவனம் செலுத்தவும் என்றும் நீங்கள் எடுக்கும் நடவடிக்கை விவரங்களை மனுதாரருக்கு நேரடியாக தெரிவிக்கவேண்டும்'' என்று கூறப்பட்டுள்ளது.

இந்த விவகாரத்தில் குடியரசுத் தலைவரின் அலுவலகம் தலையிட்டுள்ளதால், வெள்ளலூர் பகுதி மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

# ரூ.1000 கோடி வசூலித்து துராந்தர் -2 சாதனை




பாக்ஸ் ஆபிஸில் மிகப்பெரிய அதிர்வலை கிளப்பியுள்ள துராந்தர்2: திரிவெஞ்ச்' திரைப்படம், உலகளவில் ரூ.1000 கோடி வசூலைத் தாண்டி சாதனை படைத்துள்ளது. ஆதித்யா தார் இயக்கத்தில், ரன்வீர் சிங் நடித்துள்ள இந்த ஸ்பை திரில்லர், மார்ச் 19ஆம் தேதி வெளியானது முதல் ரசிகர்களிடையே அபார வரவேற்பைப் பெற்று, ஆரம்ப நாட்களிலேயே வசூலில் புதிய உச்சங்களை தொட்டுள்ளது.

பாகிஸ்தானில் செயல்படும் இந்திய உளவாளியின் விறுவிறுப்பான கதையை மையமாகக் கொண்ட இந்த படம், முதல் பாகத்தின் வெற்றியைத் தொடர்ந்து இரண்டாவது பாகம் பலத்த எதிர்பார்ப்புடன் வெளியானது. அந்த எதிர்பார்ப்பை முழுமையாக பூர்த்தி செய்த இப்படம், வெளியான வெறும் 7 நாட்களுக்குள் ரூ.1006.50 கோடி வசூலித்துள்ளது.

மேலும், பாகுபலி 2, ஆர்ஆர்ஆர், கே.எஜி. எப்போன்ற பிரம்மாண்ட படங்களின் ஆரம்ப வசூல் சாதனைகளையும் இது முறியடித்துள்ளது. முதல் நாளிலேயே இந்தியாவில் ரூ.145 கோடி (நெட்) மற்றும் வெளிநாடுகளில் ரூ.52 கோடி வசூல் செய்தது. அதேபோல், ஒரே மொழியில் ஒரே நாளில் ரூ.100கோடி வசூல் செய்த முதல் இந்திய படம் என்ற பெருமையையும் பெற்றுள்ளது.

இந்த படத்தில் ரன்வீர் சிங்குடன், ஆர்.மாதவன், அர்ஜுன் ராம்பால், சஞ்சய் தத் உள்ளிட்ட முன்னணி நட்சத்திரங்கள் நடித்துள்ளனர்.

# 'நான் விஜய் கட்சி மேடையில் ஆடவில்லை!'

## ஆசிரியை 'விசித்திர' விளக்கம்



தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு அருகே உள்ள பின்னையூர் கிராமத்தைச் சேர்ந்த அரசு பள்ளி தலைமை ஆசிரியை கிருஷ்ணவேணி (58) என்பவர் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் நடத்திய மகளிர் தின விழாவில் கலந்து கொண்டார்.

இந்தநிகழ்ச்சியில்நடிகர் விஜய்நடித்தபடபாடலுக்கு மேடையில் டான்ஸ் ஆடினார். இந்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலானது.

ஏற்கனவே, விஜய் ரசிகர்களால் தமிழகம் கலங்கி போயுள்ள நிலையில், தலைமை அசிரியையே, இப்படி நடனமாடியது பலரையும் வியப்புக்குள்ளாக்கியது.

"அரசு ஊழியர் ஒருவர் அரசியல்கட்சிநிகழ்ச்சியில் கலந்து கொண்டது மட்டுமல்லாமல் டான்ஸ் ஆடியது சரியா ? என்கிற கேள்வியும் எழுந்தது. இதையடுத்து,நன்னடத்தை விதிகளை மீறியதாக கூறி, பட்டுக்கோட்டை கல்வி அலுவலர் மதியழகன் ஆசிரியை கிருஷ்ண வேணியை சஸ்பெண்ட் உத்தரவு பிறப்பித்தார்.

இந்த நிலையில், ஆசிரியைகிருஷ்ணவேணி கூறுகையில், '' நான் ஒவ்வொரு ஆண்டும் மகளிர் தினவிழா நடத்துவேன். விஜய் கட்சியினர் நடத்திய அதே மண்டபத்தில் அவர்களின் நிகழ்ச்சிமுடிந்ததும், எனது நிகழ்ச்சி நடைபெற்றது. அப்போது, மேடையில் இருந்த விஜய் கட்சியின் பேனர் அகற்றப்படவில்லை இதையடுத்து, என்னை பலரும் தவறாக புரிந்து கொண்டனர் ''என்று விளக்கமளித்துள்ளார்.

### தனியார் நிலையங்களில் எரிவாயு நிரப்புவது

# விதிமீறல் குறித்த புகார்கள் அளிக்க கைப்பேசி எண் அறிவிப்பு



வீட்டுப் பயன்பாட்டிற்கான எரிவாயு உருளைகளை அரசு விதிகளுக்கு மாறாக தனியார் நிரப்பும் நிலையங்களில் நிரப்புவது மற்றும் கள்ளச்சந்தையில் விற்பனை செய்வது போன்ற செயல்கள் சட்டவிரோதமானவை என கோவை மாவட்ட நிர்வாகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கோவை மாவட்டத்தில் வணிக மற்றும் வீட்டு பயன்பாட்டு எரிவாயு உருளைகளை சட்டவிரோதமாக பதுக்குதல், கள்ளச்சந்தையில் விற்பனை செய்தல், உருளைகளை விதிமீறி நிரப்புதல் போன்ற செயல்களை தடுக்க மாவட்ட நிர்வாகம் தீவிர நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. இதற்காக பல்வேறு இடங்களில் திடீர் சோதனைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக கடந்த சில வாரங்களில் நடத்தப்பட்ட சோதனை களில் 1,441 எரிவாயு உருளைகள் மற்றும் அவற்றை நிரப்ப பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. மேலும் இந்த சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டதாக 9 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 10 பேருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதில் சம்பந்தப்பட்டவர்களில் ஒருவருக்கு நீதிமன்றத்தில் தண்டனையும் வழங்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக மாவட்ட ஆட்சியர் பவன்குமார் ஜி. கிரியப்பனவர் கூறுகையில், "வீட்டு பயன்பாட்டிற்கான எரிவாயு உருளைகளை தனியார் நிலையங்களில் நிரப்புவது மற்றும் கள்ளச்சந்தையில் விற்பனை செய்வது மிகப்பெரிய பாதுகாப்பு அபாயத்தை ஏற்படுத்தும். இதுபோன்ற செயல்களில் ஈடுபடுபவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார்.

மேலும், எரிவாயு உருளைகளை சட்டவிரோதமாக பதுக்குவது அல்லது கள்ளச்சந்தையில் விற்பனை செய்வது போன்ற தகவல்கள் இருந்தால் பொதுமக்கள் உடனடியாக அதிகாரிகளிடம் தகவல் தெரிவிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. புகார்கள் தெரிவிக்க 9865123446 மற்றும் 9498174273 என்ற எண்களில் தொடர்பு கொண்டு தகவல் அளிக்கலாம் என்றும் மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

# தமிழ் நடிகைகளையும் வாழ விடுங்கள்

## நடிகை ஷிவானி கோரிக்கை



தமிழ் மண்ணைச் சேர்ந்த நடிகைகளுக்கு தமிழ் இயக்குநர்கள் நல்ல கதையம்சம் கொண்ட படங்களில் நடிக்கவாய்ப்பு வழங்குவதில்லை என்று மறுப்பதாக நடிகை ஷிவானி நாராயணன் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், நடிகை ஷிவானி தமிழ் இயக்குநர்கள், தயாரிப்பாளர்களுக்கு கோரிக்கை விடுத்து இன்ஸ்டாகிராமில் வெளியிடுள்ள பதிவில் கூறியுள்ளதாவது, நான் இந்த மண்ணைச் சேர்ந்தவள். எங்களைப் போல இந்த மண்ணைச் சேர்ந்த மகள்களுக்கு தமிழ் சினிமாவின் முன்னணி இயக்குநர்கள் வாய்ப்பு வழங்க முன் வர வேண்டும்.

தமிழ் ரசிகர்களும் எங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

கோலிவுட்டில் வெளி மாநிலங்களைச் சேர்ந்த நடிகைகளுக்குதான் நமது இயக்குநர்கள் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

சிறந்த கதையம்சம் கொண்ட படங்களில் வெளிமாநில நடிகைகள் நடித்து, நமது இயக்குநர்களால் எளிதாக புகழ் பெற்று விடுகிறார்கள்.

அவர்களின் முன்னேற்றத்துக்கு காரணம் தமிழ் இயக்குநர்களும் தயாரிப்பாளர்களும் தான்.

நமது இயக்குநர்கள் கொடுக்கும் வாய்ப்புகளை வெளிமாநில நடிகைகள் பயன்படுத்திக் கொள்கிறார்கள். இது எனக்கு மிகுந்த வேதனையை தருகிறது.

'வந்தரை வாழ வைக்கும் தமிழகம்' என்று கூறி நாம் பெருமை கொள்கிறோம். எந்த மண்ணில் இருந்து வந்தும், தமிழ் திரையுலகில் வெற்றி பெறும் நிலை உள்ளது. வெளி மாநில நடிகைகளுடன் இந்த மண்ணைச் சேர்ந்த எங்களைப் போன்றவர்களையும் அவர்களுடன் சேர்ந்து வளர வாய்ப்பு வழங்கப்படுவதை தமிழ் திரையுலகம் உறுதி செய்ய வேண்டும். என்னுடைய இந்த கருத்து யாருக்கும் எதிரானது அல்ல. இது, நமது சொந்த வீட்டிலேயே உரிமையை கேட்டு வாங்குவது போன்றது. எங்களை எங்கள் சொந்த வீட்டிலேயே அந்நியர் போல நடத்தாதீர்கள்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

THE KOVAI HERALD
MARCH 29, 2026 - SUNDAY

# சிவனடியார்களுக்கு உணவளித்த மூர்க்க நாயனார் பக்தியும், பணிவும் கலந்த வரலாறு

தி கோவை ஹெரால்டு



பண்டைய தொண்டை நாட்டில் பாலாற்றின் வடக்குக் கரையில் வளம் நிறைந்து விளங்கிய திருத்தலம் திருவேற்காடு. பூவிருந்தவல்லியிலிருந்து சுமார் மூன்று கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள இந்தஊரில்வேளாளர்மரபில் பிறந்தவர் மூர்க்க நாயனார். சிறுவயதிலிருந்தே சிவபெருமானிடத்தும் அவரின் அடியார்களிடத்தும் மிகுந்த பக்தியும் அன்பும் கொண்டிருந்தார்.

தன்னை நாடி வரும் சிவனடியார்களுக்கு அறுசுவைஉணவுஅளித்து, அவர்கள் உண்ட பின் தான் உண்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அவரது இந்த தொண்டு நாடெங்கும் பரவியதால், அவருடைய இல்லத்திற்கு வரும் சிவபக்தர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்தது.

இதனால் காலப்போக்கில் அவருடைய செல்வமும் வளமும் குறையத் தொடங்கியது. இருந்தாலும் சிவனடியார்களுக்கு உணவளிக்கும்தொண்டை நிறுத்தாமல், தன்னிடம் இருந்த பொருட்கள் மற்றும் நிலங்களை விற்று அந்த பணியை தொடர்ந்து செய்தார். பின்னர் விற்கக்கூடியபொருட்களும் இல்லாத நிலை ஏற்பட்டபோதும், அந்த சேவையை நிறுத்தாமல் செய்வதற்கான வழியை அவர் தேடினார்.

அப்போது அவருக்கு ஒரு யோசனை தோன்றியது. இளமைக் காலத்தில் கற்றிருந்த சூதாட்டத்தைபயன்படுத்தி பொருள் சம்பாதித்து சிவனடியார்களுக்கு உணவளிக்க முடிவு செய்தார். சூதாட்டம் தவறானது என்பதை அறிந்திருந்தாலும், அதன்மூலம் கிடைக்கும் பொருளை நல்ல காரியத்திற்கு பயன்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் அவர் சூதாடத் தொடங்கினார்.

சூதாட்டத்தில் ஏமாற்றம் செய்தவர்களை தனது இடுப்பில் வைத்திருந்த உடைவாளால் தாக்கும் கடுமையான குணம் இருந்ததால், அவர் "மூர்க்கர்" என அழைக்கப்பட்டார். காலப்போக்கில் அவ்வூரில் உள்ள அனைவரும் அவரிடம் தோற்றதால், அவருடன் சூதாட யாரும் முன்வரவில்லை.

இதனால் அவர் பல சிவத்தலங்களுக்கு சென்று அங்குள்ள மக்களுடன் சூதாடிபொருள்சம்பாதித்து, அந்த பணத்தால் சிவனடியார்களுக்கு உணவளிக்கும் பணியை தொடர்ந்து செய்தார். இறுதியாக திருக்குடந்தை எனப்படும் கும்பகோணத்தை அடைந்து அங்குள்ள சிவபெருமானை பக்தியுடன் வழிபட்டு, அங்கும் அடியார்களுக்கு உணவளிக்கும்தொண்டை மேற்கொண்டார்.

இவ்வாறு இறுதி வரை சிவபக்தர்களுக்கு சேவை செய்த மூர்க்க நாயனார், தனது வாழ்நாளின் இறுதியில் சிவபதம் அடைந்தார்.

# கோவை நேஷனல் மாடல் பள்ளியில் நடைபெற்ற 'லில் கிட்ஸ் கார்னிவல் 2026'

தி கோவை ஹெரால்டு

கோவை நேஷனல் மாடல்சீனியர் செகண்டரி பள்ளியில்,மாணவர்களின் திறமைகளை வெளிப்படுத்தும் வகையில் 'லில் கிட்ஸ் கார்னிவல் 2026' என்ற சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. பள்ளியின் மேலாண்மை, ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்நிகழ்ச்சி நேஷனல் மாடல் மெட்ரிக் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியின் முதன்மை விருந்தினராக பிஎஸ்ஜி மருத்துவமனை புற்றுநோயியல் நிபுணர் டாக்டர் ஆர்த்தி இளங்கோ கலந்து கொண்டு மாணவர்களை மத்தியில் சிறப்புரையாற்றினார். மேலும், டெக்சாஸ் இன்ஸ்ட்ருமென்ட்ஸ் நிறுவனத்தின் மூத்த வடிவமைப்பு சரிபார்ப்பு பொறியாளர் ஹியாக்ரீவ் ரத்தினவேல் சிறப்பு





விருந்தினராக பங்கேற்று பேசினார். இந்த நிகழ்வில் சிறுவர்கள் திறமைகள் கலைநிகழ்ச்சிகள் மற்றும் பல்வேறுபொழுதுபோக்கு நிகழ்வுகள் இடம்பெற்றன.

# லிவர்பூலில் இருந்து வெளியேறுகிறார் முகமது சாலா




எகிப்து கால்பந்து சூப்பர்ஸ்டார் முகமது சாலா பிரிமீயர் லீக் சாம்பியன் லிவர்பூலில் இருந்து வெளியேற முடிவு செய்துள்ளார்.

கடந்த 9 ஆண்டுகளாக லிவர்பூல் அணிக்காக அவர் விளையாடி வந்தார். இந்த அணிக்காக 435 ஆட்டங்களில் பங்கேற்று, 255 கோல்களை அடித்துள்ளார். கடந்த 2017ம் ஆண்டு லிவல்பூல் அணி அவரை வாங்கியது. 10 ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் இருந்த போதும், ஒரு ஆண்டு முன்னதாகவே லிவர்பூலில்இருந்துமுகமது சாலா விலகுகிறார். இவரது, திறமையான ஆட்டம் காரணமாக லிவர்பூல் அணி 2019-20 , 2023-24 சீசன்களில் பிரிமீயர் லீக் பட்டத்தையும், 2019ம் ஆண்டு சாம்பியன்ஸ் லீக் கோப்பையையும் வென்றது.

தற்போது, 33 வயதான முகமது சாலா காயம் காரணமாக சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த முடியவில்லை. கடந்த சீசனில் 29 கோல்களை அடித்த அவரால், நடப்பு சீசனில் 5 கோல்கள் மட்டுமே அடிக்க முடிந்தது. இதனால், கடந்த டிசம்பர் மாதத்தில் லிவர்பூல் அணியின் பயிற்சியாளர் அர்னே ஸ்லாட்டுடன் மோதலும் ஏற்பட்டது. தொடர்ந்து , மூன்று ஆட்டங்களில்மாற்றுவீரராக களம் இறக்கப்பட்டார். காயமடைந்த தன்னை லிவர்பூல் அணி கை விட்டு விட்டதாகவும்முகமதுசாலா குற்றம் சாட்டியிருந்தார். கூறியிருந்தார்.

லிவர்பூலில் இருந்து விலகுவது குறித்து இன்ஸ்டாகிராம் பக்கத்தில் அவர் கூறியிருப்பதாவது, "துரதிர்ஷ்டவசமாக, அந்த நாள் வந்துவிட்டது. இந்த சீசனின் முடிவில் நான் லிவர்பூல் அணியில் இருந்து வெளியேறுகிறேன். இந்த அணி, இந்த நகரம், இந்த நகரத்து மக்கள் என் வாழ்வின் ஒரு அங்கமாக மாறி விட்டனர். அனைவருக்கும் நன்றி" என தெரிவித்துள்ளார்.

ஒரே வேட்பாளர் நெல்லையில் அடுத்தடுத்து வெற்றி பெற்றதில்லை...

# சாத்தூருக்கு தாவிய நயினார்

தி கோவை ஹெரால்டு



வரும் 2026 தமிழ்நாடு சட்டமன்றத்தேர்தலில்பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன், சாத்தூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட உள்ளதாக அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளார். பாஜக மேலிடம் இன்னும் முழு வேட்பாளர் பட்டியலை வெளியிடாத நிலையில், நயினார் நாகேந்திரன் தானே முன்னதாகவே இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

பாஜகசார்பாகப்போட்டியிடும் வேட்பாளர்கள் அறிவிக்கப்படவில்லை என்றாலும், நயினார் நாகேந்திரன் தனது தொகுதியை அவரே அறிவித்துள்ளார்.

அண்ணாமலை தேர்தலில் போட்டியிடுவது குறித்துபாஜகமேலிடம்தான் முடிவெடுக்கும் என்றும் அவர் தெளிவுபடுத்தினார்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் மூன்று தொகுதிகள் பாஜகவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாக நயினார் நாகேந்திரன் கூறினார்.

அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் யார் ஜெயித்தாலும் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமிதான் என்று நயினார் நாகேந்திரன் உறுதிப்படுத்தினார்.

சாத்தூரில் போட்டியிடுகிறீர்களா அல்லது திருநெல்வேலியில் போட்டியிடுகிறீர்களா என்ற கேள்விக்கு நயினார் நாகேந்திரன், "நான் சாத்தூரில் போட்டியிடுகிறேன்" என்று திட்டவட்டமாகப் பதிலளித்தார்.

நெல்லை சட்டமன்ற தேர்தலில் ஒரே வேட்பாளர் அடுத்தடுத்து வெற்றி பெற்றதில்லை. அதோடு, நயினாருக்கு நெருக்கமான ஜோதிடர் ஒருவர் ,நெல்லை இந்த முறை உங்களுக்கு கைகொடுக்காது என்று எச்சரித்துள்ளார்.

மேலும், முதல்வர் ஸ்டாலின், நெல்லையில் இந்த முறை திமுக வெற்றி பெறவில்லையென்றால், நிர்வாகிகள் கூண்டோடு மாற்றப்படுவார்கள் என்று எச்சரித்திருந்தார். எனவே, திமுக எப்படியும் தன்னை வீழ்த்தி விடுமென்று கருதியே, தொகுதி மாறும் முடிவுக்கு நயினார் வந்ததாக தெரிகிறது.

# மும்பை வான்கடே மைதான ஊழியர்களுக்கு தலா ரூ.10 லட்சம் வழங்கிய ஹர்திக் பாண்ட்யா



மும்பை இந்தியன்ஸ் அணியின் கேப்டன் ஹர்திக் பாண்ட்யா, வான்கடே மைதானத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு தலா ரூ. 10 லட்சம் பரிசாக வழங்கியுள்ளார்.

கடந்த டி20 உலகக் கோப்பைத் தொடருக்கு முன்னதாக, அந்தத் தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த வேண்டும் என்கிற முனைப்பில் வான்கடேமைதானத்தில்ஹர்திக்பாண்டியாநள்ளிரவு நேரத்திலும் பயிற்சியில் ஈடுபட்டார். அப்போது , அவருக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் மைதானப் பணியாளர்கள் செய்து கொடுத்தனர். இந்த சமயத்தில், 'உங்கள் அனைவருக்கும் ஒருநாள் நான் நல்ல விஷயம் செய்வேன் 'என்று ஹர்திக் பாண்ட்யா கூறியிருந்தார்.

தற்போது ஐபிஎல் 2026 சீசன் தொடங்க உள்ள நிலையில், தான் கொடுத்த அந்த வாக்கை மறக்காமல் மைதான ஊழியர்கள் ஒவ்வொருவருக்கும் தலா ரூ. 10 லட்சத்துக்கான காசோலையை ஹர்திக் நேரில் வரவழைத்து நேற்று வழங்கினார். கிட்டத்தட்ட 11 பேருக்கு 1.10 கோடியை அவர் பரிசாக வழங்கினார். மைதானத்தில் இருந்து மறைவாக உழைக்கும் ஊழியர்களை சந்தோஷப்படுத்தும் வகையில், தனிப்பட்ட முறையில் ஹர்திக் பாண்ட்யா இவ்வளவு பெரிய தொகையை வழங்கியுள்ளது கிரிக்கெட் ரசிகர்களிடத்தில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. சமூக வலைதளங்களில் பாண்ட்யாவின் செயலுக்கு பலரும் பாராட்டுகளை தெரிவித்து வருகின்றனர்.

பின்னர், ஹர்திக் பாண்ட்யா கூறுகையில், "இந்திய அணிக்காக இன்னும் 10 ஐசிசி கோப்பைகளை வெல்ல வேண்டும் என்பதே எனது இலக்கு "என்றார்.

# வணிக சிலிண்டர் கொடுத்தால் ஒரு மாதம் இலவச பிரியாணி: புதுமையான சலுகை

உலகளவில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டின் தாக்கம் இந்தியாவிலும் காணப்படுகிறது. மத்திய கிழக்கு பகுதியில் நடைபெற்றுவரும் போரின் காரணமாக ஹார்மோஸ் நீரிணை மூடப்பட்டதால் பல நாடுகளில் எரிபொருள் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. இதன் தாக்கமாக இந்தியாவிலும் எல்.பி.ஜி. சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்த சூழ்நிலையில், வீட்டு பயன்பாட்டுக்கான சிலிண்டர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்று மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது. இதனால் வணிக பயன்பாட்டுக்கான சிலிண்டர்கள் கிடைக்காமல் பல உணவகங்கள் கடும் சிரமத்தை சந்தித்து வருகின்றன. சில இடங்களில் உணவகங்கள் விறகுகளை பயன்படுத்தி சமையல் செய்யும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், சிலிண்டர் தட்டுப்பாட்டை சமாளிக்க ஒசூரில் இயங்கி வரும் ஈரோடு அம்மாயி மெஸ் என்ற உணவகம் புதுமையான சலுகையை அறிவித்துள்ளது. அந்த உணவகத்திற்கு ஒருவர் ஒரு வணிக பயன்பாட்டு சிலிண்டர் வழங்கினால், அவருக்கு ஒரு மாதத்திற்கு தினமும் ஒருவேளை இலவசமாக பிரியாணி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சலுகை பொதுமக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. இதுவரை 6 பேர் அந்த உணவகத்திற்கு சிலிண்டர்களை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிலிண்டர் தட்டுப்பாட்டை சமாளிக்க உணவகம் மேற்கொண்ட இந்த புதுமையான முயற்சி தற்போது பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

# எடப்பாடி பழனிசாமியை எதிர்த்து போட்டியிடும் காசி யார்?



அதிமுக பொதுச் செயலாளர் முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமிக்கு எதிராக எடப்பாடி சட்டமன்ற தொகுதியில் திமுக சார்பில் நிறுத்தப்பட்டிருக்கும் வேட்பாளர் சி. காசி.1996 ஆம் ஆண்டிலிருந்து திமுகவில் தீவிரமாக இருப்பவர்.

ஜலகண்டபுரம் பேரூராட்சி தலைவராக தொடர்ந்துபதவிவகிப்பவர் காசி.திமுகவில்தொழிலாளர் அணி மாநிலத் துணைச் செயலாளராக இருக்கிறார். 65 வயதாகும் காசி ஜலகண்டபுரம் பேரூராட்சி வட்டாரத்தில் நல்ல பெயர் பெற்றவர். அனைவரிடமும் இனிமையாக பழகுபவர். மரியாதை கொடுத்து பேசுபவர் .

சேலம் திமுகவின் முக்கிய அடையாளமாக மறைந்த வீரபாண்டி ஆறுமுகத்தின் தீவிர ஆதரவாளர். பட்டு நூல் மற்றும் பவர்லூம் பிசினஸ் செய்பவர்.

எடப்பாடி பழனிசாமிக்கு எதிராக டஃப் கொடுப்பாரா என நாம் எடப்பாடி வட்டாரத்திலேயே விசாரித்த போது, "நல்ல மனிதர். பொருளாதார வலிமைமிக்கவர். எடப்பாடி பழனிசாமி சார்ந்த கவுண்டர் சமுதாயத்தை சார்ந்தவர். ஆனாலும் இதுவரை எந்த சட்டமன்றத் தேர்தலையும் எதிர்கொள்ளாதவர் என்று கூறுகின்றனர்.

# அண்ணாமலை சட்டசபை தேர்தலுக்கு முழுக்கு... பின்னணியில் யார்?

தி கோவை ஹெரால்டு



2026 தமிழ்நாடு சட்டமன்றத்தேர்தலுக்கான தொகுதி ஒதுக்கீடு பாஜகவுக்குள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. கோவை மண்டலத்தில் கட்சியின் முக்கிய முகங்களான அண்ணாமலை மற்றும் வானதி சீனிவாசன் இடையே சீட் தொடர்பாக கடும் போட்டி நிலவி வருகிறது.

கோவைசிங்காநல்லூர் தொகுதியில் அண்ணா மலை போட்டியிட வாய்ப்பு உள்ளதாக முன்பு பேசப்பட்ட நிலையில், தற்போது கோவை வடக்கு தொகுதி மட்டுமே பாஜகவுக்கு எஞ்சியுள்ளது.

இந்தத் தொகுதியை கைப்பற்ற இருவருக்கும் இடையே போட்டி நடைபெற்று வருகிறது. பாஜகவின் சிட்டிங் எம்எல்ஏவாக இருக்கும் வானதி சீனிவாசன், கடந்த சில மாதங்களாக கோவை வடக்கு தொகுதியில் தீவிரமாகப் பணியாற்றி வருவதால், அந்தத் தொகுதி தனக்குத்தான் என்று உறுதியாக நம்புகிறார். ஏற்கனவே வடவள்ளி, கணபதி, சாய்பாபாகாலனி உள்ளிட்ட பகுதிகளில் பகுதி வாரியாக நிர்வாகிகளை நியமித்து அவர் பணிகளை தீவிரப்படுத்தியுள்ளார்.

மேலும், டெல்லி மேலிடத்தின் மூலம் தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருகிறார்.

மறுபுறம், அண்ணாமலை தனக்கு கோவை வடக்கு தொகுதியை ஒதுக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறார். "2024 நாடாளுமன்றத் தேர்தலில் கோவை மக்களவைத் தொகுதியில் நான் போட்டியிட்டபோது, அதற்கு உட்பட்ட கோவை வடக்கு சட்டமன்றத் தொகுதியில் இருந்து அதிக வாக்குகள் கிடைத்தன. எனவே அந்தத் தொகுதி எனக்கு வழங்கப்பட வேண்டும்" என்று அவர் கட்சித் தலைமையிடம் வாதிடுகிறார்.

எனவே, தொகுதி ஒதுக்கீட்டில் தனக்கு ஏற்பட்டுள்ள அதிருப்தியை வெளிப்படுத்திய அண்ணா மலை, பாஜக வளர்ந்து வரும் தொகுதிகளை ஒதுக்காமல் வேறு தொகுதிகளை ஒதுக்குவதா ? என்று கட்சி மேலிடத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும், தொகுதி ஒதுக்கீட்டில் கடும் அதிருப்தியடைந்ததால், இந்தத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்று கட்சித் தலைமைக்கு தெரிவித்துவிட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## கே.எம்.சி.ஹெச் ஆராய்ச்சி மையம் சார்பாக மாபெரும் சிறப்பு இலவச மருத்துவ முகாம்



கோவை கே.எம்.சி.ஹெச் மருத்துவமனை மற்றும் கே.எம்.சி.ஹெச் ஆராய்ச்சி மையம் சார்பாக மாபெரும் சிறப்பு இலவச மருத்துவ முகாம் தடாகம் அரசு ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் நடைபெற்றது. இந்த முகாமில் மருத்துவமனையின் தலைவர் டாக்டர் நல்லா பழனிசாமி முகாமினை துவக்கிவைத்தார். இதில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

## ஐ.பி.எல் தொடரில் முதல் இருவாரங்கள் தோனி விளையாட மாட்டார்

தி கோவை ஹெரால்டு

சென்னை அணியின் முன்னாள் கேப்டன் தோனிஐ.பி.எல்தொடரில் முதல் இரு வாரங்கள் விளையாடமாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கால் தசைப்பிடிப்பு காரணமாக சென்னை அணி நிர்வாகம் நேற்று இந்தத் தகவலை உறுதி செய்துள்ளது. சமீப காலமாக காயம் காரணமாக தோனி அவதிப்பட்டு வருகிறார். இதனால், ஐபிஎல் 2026 தொடரின் முதல் நான்கு போட்டிகளில் சென்னை அணிக்காக விளையாடமாட்டார். தோனிக்கு பதிலாக, சஞ்சு சாம்சன் அல்லது அர்வில் படேல் ஆகியோரில் ஒருவர் அணியின் விக்கெட் கீப்பிங் செய்யலாம்.



மார்ச் 30: ராஜஸ்தான் ராயல்ஸ்–சென்னை சூப்பர் கிங்ஸ்.

ஏப்ரல் 3: சென்னை சூப்பர் கிங்ஸ் - பஞ்சாப் கிங்ஸ்.

ஏப்ரல் 5: ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு - சென்னை சூப்பர் கிங்ஸ்.

ஏப்ரல் 11: சென்னை சூப்பர் கிங்ஸ் - டெல்லி கேப்பிட்டல்ஸ்.

ஆகிய ஆட்டங்களில் தோனி களம் இறங்க மாட்டார். சீசனின் தொடக்கத்தில் தோனி இல்லாதது, குறிப்பாக, தலைமைப் பண்பு மற்றும் ஆட்டத்தை முடிக்கும் திறன் ஆகியவற்றில் சிஎஸ்கே அணிக்கு பின்னடைவை ஏற்படுத்தலாம்.

கடந்த2020-ல்சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றதோனி, தொடர்ந்து ஐபிஎல் தொடரில் மட்டுமே விளையாடி வருகிறார். கடந்த சீசனில், அவர் 14 போட்டிகளிலும் பங்கேற்று,196 ரன்களை எடுத்தார். ஸ்ட்ரைக் ரேட் 135 ஆக உள்ளது. கடந்த சீசனில் காயம் காரணமாக ருதுராஜ் கெய்க்வாட் விலகிய பிறகு, மீண்டும் கேப்டனாக்கப்பட்டார். தற்போது, 44 வயதான தோனி ஐ.பி.எல் தொடரில் களம் இறங்கினால், அதிக வயதில் இந்த தொடரில் விளையாடிய வீரர் என்ற பெருமையையும் பெறுவார்.

Olirum Kovai
An Initiative of Coimbatore City Development Trust (CCDT)
Roadside trash needs clearing?
Burning garbage?
Get your civic issues fixed through the Namma Kovai app.
NAMMA KOVAI
Download on the App Store
GET IT ON Google Play
94663 95555
www.olirumkovai.com
LAKSHAKA TEX LLP

## பூண்டி வெள்ளியங்கிரி ஆண்டவர் கோயிலில் பங்குனி உத்திரத் திருவிழா தொடக்கம்



தி கோவை ஹெரால்டு

பூண்டி அருள்மிகு வெள்ளியங்கிரி ஆண்டவர் திருக்கோயிலில் பங்குனி உத்திரம் திருத்தேரோட்ட திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது.

ஐந்து நாட்கள் நடைபெறும் இந்த விழாவின் முதல் நாளில் வேள்விப்பூசைநடத்தப்பட்டு கொடிமரத்தில் திருவிழா கொடி ஏற்றப்பட்டது. இதில் ஏராளமானபக்தர்கள்கலந்து கொண்டு வெள்ளியங்கிரி ஆண்டவரை பக்தியுடன் தரிசித்தனர்.

திருவிழா நாட்களில் பல்வேறு சிறப்பு பூஜைகள் நடைபெறவுள்ள நிலையில், இறுதி நாளில் திருத்தேரோட்டம்நடைபெற உள்ளது. பக்தர்களுக்காக அன்னதானம் உள்ளிட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக நிர்வாகிகள் தெரிவித்தனர்.





அவிநாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனத்தின் 37வது பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட இந்தியத் தொழில்நுட்பக் கழகம் ( IIT ) சென்னையின் இயக்குநர் வீ.காமகோடி சிறந்த கல்வி சாதனைக்காக தங்கப் பதக்கம் ''மங்கையர்கரசி விருது'' மற்றும் சான்றிதழை ஐஸ்வர்யலட்சுமி கார்த்திகேயனுக்கு வழங்கினார்.

## 'சிக்காடா' புதிய கொரோனா வகை ஐரோப்பா, அமெரிக்காவில் வேகமாக பரவல்

ஐரோப்பா மற்றும் அமெரிக்க நாடுகளில் ஒமைக்ரான் வைரஸின் புதிய உருமாற்றமான 'சிக்காடா' வேகமாகப் பரவிவருவதாகதகவல்கள் வெளியாகி, உலகசுகாதார அமைப்பின் கவனத்தை ஈர்த்துள்ளது.

கடந்த சில ஆண்டுகளாகஅமைதியாக இருந்த கொரோனா வைரஸ், தற்போது புதிய வடிவில் மீண்டும் உருவெடுத்துள்ளது. 2022ஆம் ஆண்டுமறைந்து போனதாகக் கருதப்பட்ட ஒமைக்ரானின் பிஏ3 பிரிவிலிருந்து இந்த புதிய வைரஸ் உருமாறி உருவாகியுள்ளது என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

'சிக்காடா'என்றபூச்சிபல ஆண்டுகள் மண்ணுக்குள் மறைந்திருந்து பின்னர் திடீரென வெளியில் வரும் தன்மை கொண்டது. அதேபோல் இந்த வைரஸும் சுமார் இரண்டு ஆண்டுகளாக செயலிழந்த நிலையில் இருந்துவிட்டு, தற்போது 75க்கும் மேற்பட்ட மரபணு மாற்றங்களுடன் மீண்டும் வெளிப்பட்டுள்ளதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இந்தவைரஸின்ஸ்பைக் புரோட்டீனில் 70 முதல் 75 வரை மரபணு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதால், இது முந்தைய வைரஸ்களை விட வேகமாகப் பரவும் திறன் கொண்டதாக இருக்கலாம்என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மேலும் உடலில் உள்ள நோய் எதிர்ப்பு சக்தியையும், முன்பு செலுத்தப்பட்ட தடுப்பூசிகளின் பாதுகாப்பையும் ஒரு அளவு மீறி தாக்கும் வாய்ப்பு உள்ளதாகவும் கூறப்படுகிறது.

தற்போது அமெரிக்காவின் 25 மாநிலங்களிலும், ஐரோப்பாவில் உள்ள ஜெர்மனி, டென்மார்க், நெதர்லாந்து உள்ளிட்ட 23 நாடுகளிலும் இந்த வைரஸ் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த புதிய வைரஸின் அறிகுறிகளாக கடுமையான தொண்டை வலி, அதிக உடல் சோர்வு, லேசான காய்ச்சல், குளிர் நடுக்கம் மற்றும் சிலருக்கு வயிற்றுப்போக்கு போன்ற செரிமான கோளாறுகள் காணப்படுகின்றன.

இவ்வாறு வேகமாகப் பரவினாலும், முந்தைய டெல்டா வைரஸைப்போல நுரையீரலை கடுமையாக பாதித்து மரண விகிதத்தை அதிகரிக்கும் அளவிற்கு ஆபத்தானதாக இதுவரை தெரியவில்லை என்பது ஓரளவு நிம்மதி அளிக்கும் தகவலாகும். இருப்பினும் முதியவர்கள்மற்றும்இணை நோய்கள் கொண்டவர்கள் கூடுதல் கவனத்துடன் இருக்க வேண்டும் என உலக சுகாதார அமைப்பு அறிவுறுத்தியுள்ளது.

## புலிப்படை கட்சித் தலைவர் கருணாசுக்கு எதிராக போஸ்டர்





நடிகரும் முக்குலத்தோர் புலிப்படை கட்சித் தலைவருமான கருணாஸ் சிவகங்கை தொகுதியில் போட்டியிடுகிறார். அவருக்கு சிகங்கையில் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. கருணாசுக்கு எதிர்ப்பு தெரிவித்து கடுமையான வார்த்தைகளை பயன்படுத்தி சிவங்கை முழுவதும் போஸ்டர்கள் அச்சிடப்பட்டுள்ளன. முக்குலத்தோர் பாதுகாப்புப் படை சார்பில் இந்த போஸ்டர்கள் ஒட்டப்பட்டுள்ளன. கடந்த2016ம் ஆண்டு திருவாடனைத் தொகுதியில் அதிமுக ஆதரவுடன் கருணாஸ் போட்டியிட்டு எம்.எல்.ஏ. ஆனார். தொகுதி பக்கமே போவதில்லை என்கிற குற்றச்சாட்டு அப்போது எழுந்தது. தற்போது , திமுக கூட்டணியில் கருணாஸ் இடம் பெற்றுள்ளார்.

## தமிழகத்தை கைப்பற்றப் போவது யார்... திமுக - அதிமுக நூலிழை வித்தியாசம்!

தமிழக சட்டமன்ற தேர்தல் ஏப்ரல் 23-ம் தேதி நடைபெறுகிறது. வாக்கு எண்ணிக்கை மே4-ம் தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகக் கட்சிகள் வேட்பாளர் தேர்வு, பிரசாரம் என தீவிரமாக உள்ளன. இந்தநிலையில், தமிழகத்தில் 2026-ம் ஆண்டு தேர்தலில் எந்த கட்சி வெற்றி பெறும்? என வோட் வைப் கணிப்பு வெளியிட்டுள்ளது.

வோட் வைப் நடத்திய கருத்துக் கணிப்பின்படி, தமிழகத்தில் திமுக கூட்டணி 113 முதல் 123 இடங்களிலும், அதிமுக கூட்டணி 106 முதல் 116 இடங்களிலும் வெற்றிபெற வாய்ப்புள்ளதாம். பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட நடிகர் விஜய்யின் த.வெ.க.2 முதல் 8 இடங்களில் வெற்றி பெற வாய்ப்புள்ளதாக கூறப்பட்டுள்ளது. தமிழக முதலமைச்சராக யார் வர வேண்டும் என்ற கேள்விக்கு 39.9% பேர் தற்போதையமுதலமைச்சர் மு.க.ஸ்டாலினையும், 37.5% பேர் முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமியையும், 14.7% பேர் த.வெ.க தலைவர் விஜயையும் தேர்ந்தெடுத் துள்ளனர். தமிழக தேர்தல் இரு முனைப் போட்டி மட்டுமே என்று 41.2% பேர் கூறியுள்ளர். 12.6% பேர் ஓரளவுக்கு இரு முனைப் போட்டி என்றும், 18.7% பேர் இது மும்முனைப் போட்டி என்றும் கருத்து தெரிவித்துள்ளனர்.

கேகே சர்வேஸ் & ஸ்ட்ராடஜீஸ் நிறுவனத்தின் ஆதரவுடன் இயங்கும், தொழில்நுட்பம் சார்ந்த தேர்தல் முடிவுகளை கணிக்கும் நிறுவனமான பாராவீல்நடத்தியமற்றொரு ஆய்வில், திமுக 41.5% வாக் குப்பங்கீட்டுடன் முன்னிலை பெறும் என்றும், அதிமுக 36.2% வாக்குகளைப் பெறும் என்றும் கூறப்பட்டுள்ளது புதிய கட்சியான த.வெ.க 13.6% வாக்குகளை பெறும் என்றும் கணிக்கப் பட்டுள்ளது.பாராவீல் நடத் திய ஆய்வில், சென்னை மண்டலத்தில் திமுகவுக்கு அடுத்தபடியாக, வலிமை யான கட்சியாக த.வெ.க உருவாகியுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

## கோவை திமுக கவுன்சிலர் அதிமுகவில் ஐக்கியம்



தி கோவை ஹெரால்டு

கோவையில் ஆளும் திமுக கவுன்சிலர் எடப்பாடி பழனிசாமி முன்னிலையில் அதிமுகவில் இணைந்துள்ளார்.

கோவை மாநகராட்சி 77-ஆவது வார்டு திமுக கவுன்சிலராக இருந்தவர் ராஜலட்சுமி. இவர் திமுகவிலிருந்து விலகி அதிமுகவில் இணைந்துள்ளார். தனது குடும்பத்துடன் சென்னை சென்று அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியை நேரில் சந்தித்து அதிமுகவில் தன்னை இணைத்துக் கொண்டார். முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணியின் ஏற்பாட்டின் பேரில் இந்த இணைப்பு நடைபெற்றுள்ளது. உடன், கோவை மாநகராட்சி கவுன்சிலர் பிரபாகரன்.

## நெல்லையில் திமுகவினரின் மொய் கவர் பறிமுதல்

தி கோவை ஹெரால்டு

சட்டமன்றதேர்தல்தமிழ கத்தில்சூடுபிடிக்கப்பட்டுள் ளது. அதிமுக கூட்டணியில் வேட்பாளர்கள் பட்டியல் அறிவிக்கப்பட்டு விட்டது.

திமுக சார்பில் வேட்பாளர் பட்டியலை இறுதி செய்யப்பட்டு வருகிறது.

இதற்கிடையே, பல தொகுதிகளில் பண பட்டுவாடா நடந்து வருவதாகவும் மக்களுக்கு பெரிசுப் பொருட்களை வழங்கிவருவதாகவும் புகார் எழுந்துள்ளது.





இந்த நிலையில், நெல்லையில் பறக்கும் படையினரிடத்தில் திமுகவினர் சார்பில் பட்டுவாடா செய்ய வைத்திருந்த 63 மொய் கவர்கள் பிடிபட்டன.

வண்ணாரப் பேட்டையில் திமுக முன்னாள் எம்.எல்.ஏ மாலைராஜாவுக்கு சொந்தமான காரில் இந்த மொய்கவர்கள் பிடிபட்டன. மொய்கவர்களில்முன்னாள் முதல்வர் கருணாநிதி தற்போதைய முதல்வர் ஸ்டாலின்,துணைமுதல்வர் உதயிநிதியின் படங்களும் அச்சிடப்பட்டிருந்தன.


இந்தகாரை தச்சநல்லூரைச் அருகேயுள்ள மங்கல குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த மாரியப்பன் ஓட்டி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கங்கா நர்சிங் அன்ட் அலைடு ஹெல்த் சயின்சஸ் கல்லூரிக்கு ஐஎஸ்ஓ சான்றிதழ்

THE KOVAI HERALD

கோவை கங்கா நர்சிங் அன்ட் அலைடு ஹெல்த் சயின்சஸ் கல்லூரி, கல்வி நிறுவனங்களுக்கான மேலாண்மை அமைப்புகளுக்கான 'ஐஎஸ்ஓ 21001:2018' சான்றிதழைப் பெற்றுசாதனைபடைத்துள் ளது.

சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்டஇந்ததரச் சான்றிதழானது, உயர்தர மானகல்வி,தொடர்ச்சியான முன்னேற்றம் மற்றும் கல்வி மேலாண்மையில் சிறந்து விளங்குதல் ஆகிய வற்றுக்காக வழங்கப் படுகிறது. இந்தச் சான்றிதழ் வழங்கும் விழாவிற்கு சென்னை, டியுவி எஸ்யுடி சவுத் ஆசியா நிறுவனத்தின் மேலாண்மை அமைப்புகள் பிரிவின் துணைத் தலைவர் எம்.பன்னீர் செல்வம் தலைமை தாங்கினார். இந் நிறுவனத்தின் கோவை பொது மேலாளர் லோகநாதன் உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டார்.





கங்கா நர்சிங் அன்ட் அலைடு ஹெல்த் சயின்சஸ் கல்லூரிக்கான ஐஎஸ்ஓ 21001:2018 சான்றிதழை டியுவி எஸ்யுடி சவுத் ஆசியா நிறுவனத்தின் மேலாண்மை அமைப்புகள் பிரிவின் துணைத் தலைவர் எம். பன்னீர் செல்வம், கோவை பொது மேலாளர் லோகநாதன் ஆகியோரிடமிருந்து கங்கா மருத்துவமனையின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் கனகவள்ளி சண்முகநாதன், பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை, கை மற்றும் நுண் அறுவை சிகிச்சை மற்றும் தீக்காயப் பிரிவின் தலைவர் டாக்டர். எஸ். ராஜசபாபதி, எலும்பியல் துறை தலைவர் பேராசிரியர் டாக்டர். எஸ். ராஜசேகரன், இயக்குனர்கள் நிர்மலா ராஜசபாபதி மற்றும் ரமா ராஜசேகரன், கங்கா நர்சிங் கல்லூரியின் முதல்வர் டாக்டர். ஜெபகுமாரி சுதா ஆகியோர் சான்றிதழைப் பெற்றுக் கொண்டனர்.

இந்தச்சான்றிதழ்கங்கா மருத்துவமனையின் இயக் குனர்குழுவிடம்வழங்கப்பட் டது. கங்கா மருத்துவமனை யின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் கனக வள்ளி சண்முகநாதன், பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை, கை மற்றும் நுண் அறுவை சிகிச்சை மற்றும் தீக்காயப் பிரிவின் தலைவர் டாக்டர் எஸ். ராஜ சபாபதி, எலும்பியல் துறை தலைவர் பேராசிரியர் டாக்டர் எஸ். ராஜசேகரன், இயக்கு னர்கள் நிர்மலாராஜசபாபதி மற்றும் ரமா ராஜசேகரன், கங்கா நர்சிங் கல்லூரியின் முதல்வர் டாக்டர் ஜெப குமாரிசுதா ஆகியோர் சான்றி தழைப் பெற்றுக் கொண்ட னர். சிறந்தகல்வியைவழங்கு வதிலும், உலகளாவியதரங் களைப் பின்பற்றுவதிலும் இந்தச் சாதனை ஒரு முக்கிய மைல்கல்லாக அமைந்துள்ளது.

தமிழ்நாட்டில் 'ஐஎஸ்ஓ 21001:2018' சான்றிதழைப் பெறும் இரண்டாவது நர்சிங் கல்லூரி மற்றும் கோவை மண்டலத்தில் இந்த அங்கீகாரத்தைப் பெறும் முதல் நர்சிங் கல்வி நிறுவனம் இதுவாகும்.

## நேபாள முன்னாள் பிரதமர் சர்மா ஒலி கைது



நேபாள முன்னாள் பிரதமர் கே.பி. சர்மா ஒலி மார்ச்28-ந்தேதி அதிகாலை கைது செய்யப்பட்டார். புதிய பிரதமராகப் பதவியேற்ற பாலேந்திர ஷா தலைமையிலான அரசின் உத்தரவின் பேரில் இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் நேபாளத்தில் நடைபெற்ற ‘ஜென் இசட்’ எனப்படும் இளைஞர்கள் போராட்டத்தை ஒடுக்கியதில் நடந்த வன்முறை மற்றும் உயிரிழப்புகள் தொடர்பான குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் கே.பி. சர்மா ஒலி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த வழக்கில் சர்மா ஒலியுடன் சேர்த்து, அப்போதைய உள்துறை அமைச்சர் ரமேஷ் லேகாக் கைதுசெய்யப்பட்டுள்ளார். நேபாளத்தின் தேசிய தண்டனைச் சட்டத்தின் கீழ் இவர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. குற்றச்சாட்டு நிரூபிக்கப் பட்டால் 10 ஆண்டுகள் வரை சிறை தண்டனை கிடைக்க வாய்ப்புள்ளது.

## பிரதமர் மோடி இன்று கோவை வருகை



பிரதமர் கோவை வருகையை முன்னிட்டுஅவர்செல்லும்பகுதிகள் தற்காலிகசிவப்புமண்டலங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. அந்த பகுதிகளில் ட்ரோன் பறக்க தடை செய்யப்பட்டுள்ளதாக கோவை மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

கேரள மாநிலத்தில் வரும் ஏப்ரல் 9-ஆம் தேதி சட்டமன்றத் தேர்தல் நடைபெற உள்ளது. இந்நிலையில் மார்ச் 29-ம் தேதி பாலக்காடு மற்றும் திருச்சூர் மாவட்டங்களில் நடைபெறும் பிரச்சாரக் கூட்டங்களில் பிரதமர் மோடி பங்கேற்கிறார்.

இதற்காக டெல்லியில் இருந்து நாளை விமானம் மூலம் பிரதமர் மோடி கோவை வருகிறார். பின்னர் சாலை மார்க்கமாக பாலக்காடு செல்கிறார். பிரதமர் மோடி கோவை வருவதை முன்னிட்டு பாதுகாப்பு காரணங்களுக்காக ஏற்கனவே அறிவிக்கப்பட்ட சிவப்பு மண்டல பகுதிகளுடன் அவிநாசி சாலை, நேரு நகர், சிட்ரா, பீளமேடு, எஸ்.ஐ.ஹெச். எஸ் காலனி, சிங்காநல்லூர், சின்னியம்பாளையம், காளப்பட்டி, போத்தனூர், சுந்தராபுரம், ஈச்சனாரி, நீலாம்பூர், சிந்தாமணி, செட்டிபாளையம், மதுக்கரை, எட்டிமடை, வாளையார் ஆகிய பகுதிகள் தற்காலிக சிவப்பு மண்டலமாக அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்த பகுதிகளில் ட்ரோன் மற்றும் ஆளில்லா வானூர்திகள் பறக்க மாவட்ட நிர்வாகம் தடை விதித்துள்ளது.

தடையினைமீறிட்ரோன்களைப் பறக்க விடுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என கோவை மாவட்ட ஆட்சியர் பவன் குமார் கிரியப்பன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.கோவையில் 29-ஆம் தேதி மாலை 5 மணி வரை இந்தக் கட்டுப்பாடுகள் தொடரும் என கோவை மாவட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரயில் மீது கல் எறிந்தால் ஆயுள் சிறை தண்டனை



ரயில்கள் மீது கல் எறியும் சம்பவங்கள் அதிகரித்ததை தொடர்ந்து, தெற்கு ரயில்வே கடுமையான எச்சரிக்கை வெளியிட்டுள்ளது.இப்படிப்பட்ட செயல்களில்ஈடுபடுவோருக்கு கடுமையான சிறைத்தண்டனை விதிக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வேகமாக செல்லும் ரயில்களுக்கு கல் வீசுவது பயணிகளின் உயிருக்கு நேரடி அச்சுறுத்தலாகும். ஜன்னல் கண்ணாடிகள் உடைந்து, உள்ளே இருப்போருக்கு தீவிர காயங்கள் அல்லது நிரந்தர பாதிப்புகள் ஏற்படும் அபாயம் உள்ளது. இந்த குற்றங்களுக்குகீழ் வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன. இதன்படி 10 ஆண்டுகள் வரை அல்லது சில நேரங்களில் ஆயுள் தண்டனையும் விதிக்கப்படலாம். மேலும் அபராதத்துடன் சிறைத்தண்டனையும் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

## இயக்குநர் பாலியல் வன்கொடுமை செய்ய முயன்றார்: கண்ணீருடன் குற்றம்சாட்டிய மோனலிஷா



உத்தரப்பிரதேசத்தில் கடந்த 2025ம் ஆண்டு ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் மகா கும்பமேளா நடைபெற்றது. இந்த கும்பமேளாவில் மத்தியபிரதேச மாநிலம் இந்தூரைச் சேர்ந்த குடும்பம் ஒன்று பாசிமணி விற்க, கடை விரித்திருந்தது. இந்தக் குடும்பத்தைச் சேர்ந்த இளம்பெண் மோனலிஷா போஸ்லே. நடிகை ஐஸ்வர்யா ராய் போன்ற கண்ணழகுடன், அழகுறக்காணப்பட்ட இந்த பெண்ணை ஒரு யூடியூபர் வீடியோ எடுத்து வெளியிட, மோனலிஷா, இந்தியாவில் பட்டி தொட்டியெல்லாம் பிரபலமானார்.

சினிமாவிலும் நடிக்க வாய்ப்பு கிடைத்தது. இவருக்கு பட வாய்ப்பு கொடுத்தவர் பாலிவுட் இயக்குநர் சனோஜ் மிஸ்ரா.

இதற்கிடையே, மோனலிஷாவுக்கும் மகராஷ்டிரத்தைச் சேர்ந்த முகமது ஃபர்மான் என்ற இளைஞருக்கு காதல் ஃபேஸ்புக் வழியாக உருவானது. இவர்களின் காதலுக்குமோனலிஷாவின் பெற்றோர் எதிர்ப்பு தெரிவிக்கவே, கேரளாவுக்கு படப்பிடிப்புக்குச் சென்ற இடத்தில் திருவனந்தபுரம் அருகேயுள்ள தம்பானூர் போலீஸ் நிலையத்தில், உதவி கேட்டு காதலருடன் மோனலிஷா தஞ்சமடைந்தார்.

தொடர்ந்து, கேரள அமைச்சர் சிவன் குட்டி முன்னிலையில், முகமது ஃபர்மானுக்கும் மோனலிஷாவுக்கும் திருவனந்தபுரத்திலுள்ள இந்து கோயிலில் திருமணம் நடந்தது. இந்த நிலையில், கொச்சியில் பத்திரிகையாளர்களை கணவருடன் சந்தித்த மோனலிஷா, தன்னை பற்றி எழுந்த சர்ச்சைகளுக்கு விளக்கம் அளித்துள்ளார். அவர் கூறியதாவது, ‘தி டைரி ஆஃப் மணிப்பூர்’ படத்தில் படத்தின் படப்பிடிப்பு நேபாளம் மற்றும் டேராடூனில் நடந்தபோது, இயக்குநர் சனோஜ் மிஸ்ரா என்னிடம் தவறாக நடந்துகொண்டார். சனோஜ் மிஸ்ரா ஒரு நல்ல மனிதரல்ல. 10 முறை தவறான வகையில், என்னை அவர் தொட்டார். இது தொடர்பாக நான் என் குடும்பத்தினரிடம் சொன்னேன். அப்போது, எனது குடும்பத்தினர் எனக்கு ஆதரவாக இல்லை. நான் பட்ட துயரங்கள் எனக்கு மட்டுமே தெரியும். எனது பெற்றோர் ‘இது உன்னுடைய முதல் படம் ... வெளியே எதுவும் சொல்லதே’ என்று என்னிடத்தில் கூறினர். முதல் படம் என்பதற்காக, என்னை இன்னொருவர் பாலியல் வன்கொடுமை செய்தால் ஏற்றுக் கொள்ள முடியுமா?

இது குறித்து, முன்பே நான் புகாரளிக்க இருந்தேன். ஆனால், எனது குடும்பத்தினர் தடுத்து விட்டனர். எனது காதல் குறித்து, ‘லவ் ஜிகாத்’ என வதந்தியை பரப்பி விட்டதும் இயக்குநர் சனோஜ் மிஸ்ராதான். தற்போது, நான் மேஜர். எனது ஆதார் அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள வயதைப் பாருங்கள். அதன்படி, எனது கணவரை தேர்வு செய்ய நான் தகுதியானவள்.”

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.





## அண்ணா பல்கலையில் கொடூர பேராசிரியர்; மாணவி கதறல்!

அண்ணா பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் ஒருவர் மீது மாணவி ஒருவர் பாலியல் தொல்லை புகார் அளித்துள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அண்ணா பல்கலைக்கழகப் பேராசிரியர் ஞானவேல் பாபு மீது, தனது ஏழ்மையைப் பயன்படுத்தி பண உதவி செய்து அத்துமீறியதாக மாணவி ஒருவர் பாலியல் புகார் அளித்துள்ளார். இந்தப் புகாரின் அடிப்படையில் பல்கலைக்கழக நிர்வாகம் உடனடியாக நடவடிக்கை எடுத்து, பேராசிரியர் ஞானவேல் பாபுவை சஸ்பெண்ட் செய்துள்ளது.

மாணவி தனது புகாரில், கடந்த மூன்று ஆண்டுகளாக பேராசிரியர் ஞானவேல் பாபு தன்னிடம் போனில் மற்றும் நேரிலும் தவறான நோக்கத்துடன் பேசி தொல்லை கொடுத்து வந்ததாகக் குற்றம் சாட்டியுள்ளார். தனது குடும்பத்தின் ஏழ்மைநிலையைப்பயன்படுத்திபண உதவி செய்வதாகக் கூறி, பலமுறை அத்துமீற முயற்சித்ததாகவும் மாணவி தெரிவித்துள்ளார்.

இந்தப் புகார் அண்ணா பல்கலைக்கழக நிர்வாகத்தின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்ட உடனேயே, பேராசிரியர் ஞானவேல் பாபு சஸ்பெண்ட் செய்யப்பட்டார். பல்கலைக்கழகம் இந்த விவகாரத்தில் உரிய விசாரணை நடத்தி, கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த சம்பவத்திற்கு அரசியல் தலைவர்கள் பலரும் கண்டனங்களை தெரிவித்து வரும் நிலையில் அண்ணாமலை தனது கண்டனத்தை பதிவு செய்துள்ளார். “அண்ணா பல்கலைக்கழகத்தில், மாணவியிடம் பாலியல் தொல்லை கொடுத்ததாக, பேராசிரியர் மீது வந்துள்ள குற்றச்சாட்டு மிகுந்த அதிர்ச்சி அளிக்கிறது. மாணவிகளின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டிய கல்வி நிறுவனங்களிலேயே, தொடர்ந்து இத்தகைய சம்பவங்கள் நடப்பது துரதிருஷ்டவசமானது மற்றும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது” என கூறியுள்ளார்.







Published by S.Kamalakannan Printed by S.Prabhakaran on behalf of Senthur Printers. Printed at Door No.7, Lakshmi Nagar, 2nd Street, Nallampalayam Road, New Sanganoor, Rathinapuri (Po), Coimbatore – 641027. Published from 27, Vinayagar Koil Street, Krishnaswamy Nagar, Ramanathapuram, Coimbatore – 641045. Editor K.Abirami. (Note: All the litigations aur within the jurisdiction of Coimbatore courts only.)